KALAIKESARI
கலைக் கேசரி
CULTURE HERITAGE TRADITION EVENTS FASHION INTERVIEWS ENTERTAINMENT
www.kalaikesari.com / JUNE 2010



# தமிழ்ச் செம்மொழி மாநாடு

## கோவை —2010 சிறப்புமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநாட்டுத் தலைமைக் குழு

**தலைவர்**
**கலைஞர் மு. கருணாநிதி**
மாண்புமிகு முதலமைச்சர்

**துணைத் தலைவர்கள்**
**பேராசிரியர் க. அன்பழகன்**
மாண்புமிகு நிதியமைச்சர்

**திரு. மு. க. ஸ்டாலின்**
மாண்புமிகு துணை முதலமைச்சர்

**முனைவர் வா. செ. குழந்தைசாமி**
துணைத் தலைவர், உலகத் தமிழாய்வுக் கழகம்

**திரு. ஐராவதம் மகாதேவன்**
தொல்லியல் அறிஞர்

**உறுப்பினர்கள்**
**திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப.**
தலைமைச் செயலர்

**திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப.**
முதன்மைச் செயலர், நிதித் துறை

**அமைப்பாளர்**
**திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப.**
தனி அலுவலர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

## மாநாட்டு ஆய்வரங்க அமைப்புக் குழு

**தலைவர்**
**பேராசிரியர் முனைவர் கா. சிவத்தம்பி**
(இலங்கை)

**இணைத் தலைவர்கள்**
**முனைவர் ஔவை நடராசன்**
**முனைவர் பொன் கோதண்டராமன்**

**செயலாளர்**
**கவிஞர் கனிமொழி**
மாநிலங்களவை உறுப்பினர்

**ஒருங்கிணைப்பாளர்**
**முனைவர் ம. இராஜேந்திரன்**
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 21-05-2010

## வாழ்த்துச் செய்தி

இலங்கையிலிருந்து வெளிவரும், "வீரகேசரி" தமிழ் நாளிதழின் கலைப்பண்பாட்டு மாத இதழாகிய, "கலைக்கேசரி" கோவை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டிச் சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்கிறேன்.

உலகின் மொழியியல் துறை அறிஞர்களால் தமிழ்மொழியின் தொன்மை, தூய்மை, வளமை, தனித்தன்மை அனைத்தும் பாராட்டப்பட்டுள்ளன. செவ்வியல் மொழித் தகுதியை முழுமையாகக் கொண்டுள்ள மொழி எனத் தமிழ் போற்றப்படுகிறது. எனினும், "செம்மொழி" எனும் தகுதி இந்திய மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனும் கோரிக்கை நூறாண்டுகளுக்குப் பின், கடந்த 2004ஆம் ஆண்டில்தான், அதிலும் நமது துணையோடு அமைந்த மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினால்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அங்கீகாரத்தைப் பெற்ற மகிழ்ச்சியின் நினைவோடு செம்மொழித் தமிழுக்குச் சிறப்புகள் சேர்க்கும் வகையில் உலகத் தமிழறிஞர்களையெல்லாம் கூட்டி, வரும் ஜூன் திங்களில், "உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு" கூட்டப்படுகிறது. மாநாட்டு வெற்றிக்குரிய ஆயத்தப் பணிகள் அனைத்தும் முழுவீச்சில் நடைபெறும் வேளையில், இலங்கை, "கலைக்கேசரி" திங்களிதழ் சிறப்பு மலர் வெளியிடுவது பாராட்டுக்குரியது.

மலர், செம்மொழித் தமிழின் மணம் பரப்பிட எனது உளமார்ந்த நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

(மு.கருணாநிதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "தமிழை ஒரு தொல்சீர் மொழியாகப் பார்ப்பது மாநாட்டின் எடுகோள்"

**தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியரும், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆய்வரங்க அமைப்புக் குழுவின் தலைவருமான கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் வழங்கிய சிறப்புச் செவ்வி :**

இந்திய மொழிகளில் அன்று தொடக்கம் இன்றும் பேச்சு வழக்கில் இருப்பதும் மிகப் பழையதான சமயச் சார்பற்ற இலக்கியங்களைக் கொண்டதுமாக தமிழ் மொழி விளங்குகின்றது. உலகில் எந்த மொழிக்கும் இந்தச் சிறப்புக் கிடையாது. எனவேதான் பிரெஞ்சுப் பேராசிரியர் ஃபிலியோசா (Filliozat) "தமிழைப் படிக்காமல் இந்திய நாகரிகத்தை விளங்கிக் கொள்ள முடியாது" என எழுதி இருக்கிறார், எனக் கூறுகிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆய்வரங்க அமைப்புக் குழுவின் தலைவர் என்ற கௌரவத்துக்குரிய இலங்கை அறிஞராகத் திகழும் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, இச்செம்மொழி மாநாடு குறித்து பல்வேறு விடயங்களை கலைக்கேசரியுடன் பகிர்ந்து கொண்டார். பேராசிரியர் கூறிய கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு எனும்போது, எடுகோளாகக் கொள்வது தமிழை ஒரு தொல்சீர் மொழியாகப் பார்ப்பதேயாகும். அத்துடன் உலகின் பிற தொல்சீர் மொழிகளுடன் ஒப்புநோக்குவதும் இடம்பெறும். தமிழின் வரலாறு அதனோடு தொடர்புற்ற சமூகவியல், திராவிடவியல் அம்சங்களும் பிறமொழிகளில் தமிழுக்குள்ள செல்வாக்கு முதலியவற்றை வரலாறு பூர்வமாக பார்த்தலும் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கைநிலை, அரசியல்நிலை ஆகியனவற்றை அலசலும் இப்பெருவிடயத்தினுள் அடங்கும்.

இந்திய உபகண்டத்தில் இரு பெரும் மொழிக் குடும்பங்கள் காணப்படுகின்றன. ஒன்று இந்தோ ஆரிய மொழிக் குடும்பம். மற்றையது திராவிட மொழிக் குடும்பம். இவையே இந்திய நாகரிகத்தை உருவாக்கியவை. திராவிட மொழிக் குடும்பத்தின் இந்திய நிலைப் பரவல் முக்கியமானது. அவற்றின் முன் படிம நிலையும், அவை திரிந்து பல்வேறு மொழிகளாக கிளம்பிய முறைமையும் விரிவாகப் பேசப்படுகின்றன.

அனைத்திந்திய நிலையில் திராவிட மொழிகளை மூன்று நிலைப்பட வகுப்பர். இந்தியாவின் வட பகுதியில் திராவிட மொழிகள் சில உள்ளன. அவற்றை வட திராவிட மொழிகள் என்பர். பிரஹுயெி என இன்று பேசப்படும் மொழி வட திராவிட மொழிகளுக்கான உதாரணமாகச் சொல்லப்படுகின்றது. தெலுங்கு மொழியினை மத்திய திராவிட மொழி என்பர். ( திரிகலிங்கை என்பதே தெலுங்கு ஆயிற்று என்பர்) புவியியல் அடிப்படையில் தெலுங்குக்கு தெற்கே வரும் திராவிட மொழிகள் தென் திராவிட மொழிகள் எனப்படும். தமிழ், கன்னடம், மலையாளம், துளு, கூர்க் (குடகு) என்பன இதனுள் இடம் பெறும் என்பர்.

நான் மொழியியலாளன் அல்லன்; இத்தகவலை பருப்பொருளாகவே கூறுகின்றேன். தமிழ் தென் திராவிட மொழிகளுள் மூத்த மொழி என்பர். அதன் பேச்சு நிலை வடிவாக்கம் எவ்வாறு ஏற்பட்டது என்பதனைத் திட்ட வட்டமாகக் கூறமுடியாவிட்டாலும் எழுத்துநிலை வடிவாக்கத்தை ஓரளவிற்கு திட்டவட்டமாக கூறக்கூடிய அளவிற்கு ஆராய்ச்சிகள் இன்று வளர்ந்துள்ளன.

அசோகச் சக்கரவர்த்தியினது பிரஹ்மி எழுத்துக்களைத் தொடர்ந்து தமிழ் எழுதும் முறை வளர்ந்ததெனக் கூறுவார் உளர். ஆனால் அரிக்கமேடு போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட எழுத்துப் படிமங்களில் பிரஹ்மி எழுத்துக்களுக்கு முந்தியவையான குறியீடுகள் (pre-bramic symbols) சில உள்ளன என்று கூறப்படுகின்றது.

மொழிகளைப் பொறுத்த வரையில் முதலில் பேச்சும் அதன் பின்னரே எழுத்தும் வருவதே உலக நியதியாதலின் தமிழ் நீண்டகாலமாக பேசப்பட்டு வந்திருத்தல் வேண்டும். வணிக, அரச தொடர்புத் தேவைகளுக்காகவே எழுதும் முறை தோன்றுதல் மரபு. இந்நடை முறை மிகப்பிந்திய தாகவே இருக்கும். இவ்வாறு நோக்கும்போது தமிழிலுள்ள பிராஹ்மி எழுத்துக்களை மாத்திரம் வைத்துக் கொண்டு தமிழ் மொழியின் வரலாற்றைக் கூறிவிட முடியாது. கூறவும் கூடாது. அப்படிக் கூறுவது அறிவியல் சார்ந்த நடைமுறையும் அன்று.

அகநாநூறு, புறநாநூறு, குறுந்தொகை ஆகிய தொகை நூல்கள் பாடல் வரிக்கணக்கில் உள்ளன. இவை தொகுக்கப் படுவதற்கு முன்னர் எப்படி இருந்திருக்கும்? இறையனார் அகப்பொருள் உரையில் ஓரிடத்தில் உரைக் கையளிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய ஒரு நீண்ட குறிப்பு வருகின்றது. அவர் அவருக்குச் சொன்னார்; இறுதியில் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்பவர் மூசிறி நீலகண்டனாருக்குச் சொல்ல அவர் அதை எழுத்தில் பொறித்தார் என்பர். இங்கே ஒரு கையளிப்புப் பாரம்பரியம் இருந்து வருகின்றது. இத்தகவலில் அகப்பொருள் உரை கையெழுத்துப் பிரதியாக்கப்படும்வரை உள்ள கையளிப்பு முறைமை எடுத்துக் கூறப்படுகின்றது. இது உரைக்கான கையளிப்பு முறை என்றால் ஏறத்தாள கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதலே செழுமை மிக்க வாய்மொழிப் பாடல்களாக விளங்கிய சங்கப் பாடல்கள் அவை ஒவ்வொன்றும் தொகுக்கப் பெறும் காலம் வரை எவ்வாறு? யார்யார்? வழியாக கையளிக்கப் பெற்றன என்ற தரவுகள் இல்லை என்று சொல்லுமளவுக்கு உள்ளது. இதனை எவ்வாறு புரிந்து கொள்வது?

தமிழின் மிகப் பழைய இலக்கியம் சங்க இலக்கியம். இந்தச் சங்க இலக்கியம் ஆகக் கூடினால் கி.மு. 300 க்குப் பின்னர்தான். தமிழினுடைய சங்ககால வரலாற்றைப் பின் நோக்கிப் பார்க்க வேண்டும். **சங்கப்பாடல்களைப் பார்க்கும் போது அவை ஒரு மொழியினுடைய ஆரம்பநிலைக் கவிதைகளாகத் தெரியவில்லை.** திணை மரபு இருக்கின்றது. ஒரு நீண்ட பாடல் மரபு தெரிகின்றது. அப்படியென்றால் இதற்கு முந்திய இலக்கிய வடிவம் யாது?

ஒரு மொழியின் பயன்பாடு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மக்கள் சிந்திப்பதற்கும் உதவுவதாகும். கருத்தைச் சொல்வதற்கு மாத்திரமல்ல சிந்திப்பதற்கும் மொழி வேண்டும்.

Classical Language என்பதன் மொழிபெயர்ப்பாக செம்மொழி என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. செம்மொழி என்பது நல்வார்த்தை அல்லது தொகை இல்லாத ஒரு மொழி என்ற கருத்துடையது என்று தமிழ் லக்சிகன் கூறுகின்றது. **Classical Language என்பதற்கு தொல்சீர் மொழி எனும் சொற்றொடரே பொருத்தமாக இருக்கும்.** துரதிஷ்டவசமாக உலக நிலைப்பட்ட மொழியியல், இலக்கிய ஆய்வு நிலைகளில் இது முதன்மைப்படுத்தப்படவில்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தொல்சீர் மொழிகளாக சமஸ்கிருதம், தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் உள்வாங்கப்பட்டுள்ளன. இப்போது உலக செம்மொழிகளில் தமிழும் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

மேல்நாட்டு நாகரிகம் கிரேக்கம், இலத்தீன் ஆகிய இரண்டு மொழிகளினது இலக்கியம், கலைகள், பண்பாடு ஊடாகவே உருவானவை. இது Classical Civilization எனக் கூறப்படுகின்றது. ஆனால் இப்பொழுதோ Classical Language கொஞ்சம் அகலப்படுத்தப்பட்ட கருத்தினை உடையதாகக் காணப்படுகின்றது. இதன் வழி நோக்கும்போது, உலகில் கிரேக்கம், இலத்தின் ஹீப்று, சீனம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் சேர்த்துச் சொல்வது மரபாகி விட்டது. உலக நிலையில் சமஸ்கிருதத்தை அறிஞர்கள் செம்மொழி என எடுத்துக் கொள்வதில்லை. காரணம் அது பேசப்படும் மொழியல்ல. கிரேக்கம் நவீன கிரேக்கமாகத் தொடர்கின்றது. சீனத்திற்கும் அத்தகையதோர் தொடர்ச்சி நிலையைக் காணலாம். ஹீப்று இஸ்ரேலின் அரச அலுவல் மொழியாகும். செம்மொழித் தகுதி மூன்று முக்கிய பண்புகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. முதலாவது தொன்மை; அடுத்தது தொடர்ச்சி; அடுத்தது செழுமை வளம்.

இந்திய அரசியலைப்பில் சமஸ்கிருதம் செம்மொழியாகக் கொள்ளப்பட்டமைக்கு காரணம், அது இந்திய வைதீக நாகரிகத்தின் ஊற்றாக இருப்பதினாலாகும். சமஸ்கிருதம் எனும் சொல்லின் கருத்தே `நன்கு செய்யப்பட்டுள்ளது` என்பதாகும். பிராஹிருதம் என்பது பேச்சு நிலைவடிவம் ஆகும். தமிழிலே இதனை பாகதம் என்று கூறும் மரபு உண்டு. **சமஸ்கிருதம் எழுதப்பட்ட மொழியே தவிர, சாதாரண பேச்சு மொழியன்று;** அது என்றும் எவருடைய தாய் மொழியாகவும் இருந்ததில்லை. சமஸ்கிருத வளர்ச்சியிலும் இருநிலைகளைக் காண்கின்றோம். ஒன்று வேதகாலத்து சமஸ்கிருதம். ரிக் வேதத்தை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இலக்கியங்களைப் பொறுத்தவரை ரிக்வேதம் குறைந்த பட்சம் கி.மு. 1000 - 1500 வருடங்களுக்கு முன்தோன்றியிருக்க வேண்டும். அடுத்தது குப்தர் காலத்து தொல்சீர் சமஸ்கிருதம்.

தமிழிலக்கணத்தில் சமஸ்கிருதம் வடமொழி என்றே குறிப்பிடப்படுகின்றது. இதற்குக் காரணம் வட மொழி என்பது சமஸ்கிருதம், பாளி ஆகிய இரண்டையும் குறிப்பதாகும். மற்றைய மொழிகளுக்கு உள்ள தொன்மையும் **தொடர்ச்சியும்** சமஸ்கிருதத்துக்கு இல்லை.

தமிழை எடுத்துக்கொண்டால் அது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. தமிழை தென் திராவிட மொழிகளுக்கான முதன்மை உதாரணமாகக் கொள்வர். இத்தென் திராவிட மொழிகளுள் கன்னடம், துளு, மலையாளம் போன்றவை வரும்.

இந்தியாவின் பெருங்கற்படைப் பண்பாடு ஏறத்தாள கி.மு. 700 - 1000 வருடங்கள் என்பர். இப்பண்பாடு உள்ள இடங்களில் தமிழ் காணப்படுகின்றது என்பர். திராவிடத்தின் பழமையை ஆராய்ந்த பேராசிரியர் தோமஸ் பரோ, வேத சமஸ்கிருதத்தில் திராவிடச் சொற்கள் காணப்படுவதாகவும், அடுத்துவரும் சமஸ்கிருத வளர்ச்சியில் இவை படிப்படியாகக் குறைவதாகவும் எடுத்துக் கூறியுள்ளார். இன்றும் வடஇந்தியாவில் பேசப்பட்ட திராவிட மொழிகளின் எச்சசொச்சமாக பிரஹூயி மொழி காணப்படுகின்றது. இந்தளவுக்கு தொன்மை நிலைப்பட்டனவான தமிழின் இலக்கியச் சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. எம்மிடமுள்ள மிகப் பழைய இலக்கியம் சங்க இலக்கியமே.

புராதன தமிழ்க் கவிதை இயற்கைச் சூழலால் தீர்மானிக்கப்பட்டதென்பது திணைக்கோட்பாட்டின் மூலம் தெரியவருகின்றது. இப் பாடல்களின் ஊடே இலியட், ஒடிசி போன்ற கதைப்பாடல் எதுவும் காணப்படவில்லை. இவ்வாறு தொன்மையான இலக்கியங்களைக் கொண்டுள்ளமை மட்டுமல்லாது அது இன்றும் வழக்கு மொழியாகவும் இருப்பது தமிழின் சிறப்புக்கு மற்றுமொரு காரணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பிரஹ்மி கல்வெட்டுக்கள் சம்பந்தமான பிரச்சினைகள் இருந்தன. அதாவது இவை அசோகனுடைய பிரஹ்மி கல்வெட்டுக்களின் வளர்ந்த வடிவம் என்று சொல்கிறார்கள். அதேவேளை இந்த பிரஹ்மி கல்வெட்டுகளில் சில குறியீடுகள் அசோகன் பிரஹ்மியில் உள்ளவை அல்ல. அசோகனுடைய காலத்துக்கு முந்திய இந்தக் குறியீடுகள் எல்லாம் திராவிட நாகரிகம் சார்ந்தவையாக இருத்தல் வேண்டும் என்பர். அப்போ இந்த பிரஹ்மி குறியீடுகளுக்கு முன்பே தமிழ் எழுதும் முறை இருந்திருக்க வேண்டும்.

இறந்தவர்களை அடக்கம் செய்யும் போது கற்படை ஒன்று கட்டி, அந்தக் கற்படையில் இறந்தவரின் உடலை வளர்த்தி, சாப்பிடும் சாப்பாடுகளை வைத்து, கல்லால் மூடிவிடுவார்கள். பின்னர் இறந்தவரை எரித்து மிகுதியாக உள்ள எலும்புகளை ஒரு தாழியில் போட்டு நிலத்தைக் கிண்டி புதைத்து விடுவார்கள். இதனையே முதுமக்கள் தாழி என்று குறிப்பிடுவர். இந்த நாகரிகம் இந்தோ ஆரிய வாழ்க்கை முறைக்கு முந்தியது. 80 களில் நடைபெற்ற ஆனைக்கோட்டை அகழ்வு நடவடிக்கையின்போது, கோவேந்து - கோ என்று எழுதப்பட்ட செம்மண் ஓடு கண்டெடுக்கப்பட்டது. இது கி.மு. 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆனால் இந்தக் கல் வைக்கும் பழக்கம் இப்போதும் இருக்கின்றது.

தமிழுக்கு இன்று அனைத்துலகப் பரம்பல் ஒன்று கிடைத்துள்ளது. சிங்கப்பூர், மலேசியா, தென்ஆபிரிக்கா, றெயூனியோன் போன்ற நாடுகளில் தமிழுக்கோர் அந்தஸ்துள்ளது.

மாநாட்டுக்கான இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இந்த மாநாட்டை அரசியலாக்கக் கூடாது எனவும் குறிப்பிட்டார். அப்போது குறுக்கிட்ட கலைக்கேசரி, தமிழக முதல்வர் இலங்கைத் தமிழர் விடயத்தில் சார்பான போக்கை செயலில் காட்டவில்லை என்பதனால், அவர் நடத்தும் மாநாட்டில் நீங்கள் பங்குபற்றுவது குறித்த விமர்சனங்கள் தமிழகத்தில் காரசாரமாக நடக்கின்றனவே, இதுபற்றிய உங்கள் பார்வையும் கருத்தும் என்ன? எனக் கேட்டபோது, பேராசிரியர் சிவத்தம்பி கூறியதாவது:-

இதற்கான பதிலை நான் இரண்டு நிலைப்பட எடுத்துக் கூற விரும்புகின்றேன். இலங்கைத் தமிழர்களின் அரசியற் போராட்டத்ததிற்கு ஆதரவு தெரிவிக்காத, உதவி செய்யாத ஒருவர் நடத்தும் மாநாட்டுக்கு போவதென்பது!

இரண்டாவது, நாம் விரும்பியோ விரும்பாமலோ இந்த மாநாடு நடக்கப் போகின்றது என்பது, அந்த மாநாட்டில் எமது ஆதங்கங்களை மிகச் சிறிய முறையிலேனும் எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்பினை இழக்கலாமா என்பது!

இதுபற்றி மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்னரே இலங்கை நாளிதழ்களில் பெருத்த விவாதங்கள் நடந்தன. உண்மையில் முதன் முதலில் அனைத்துலக தமிழாராட்சி நிறுவனத்தின் மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்பதாகவே பேசிக்கொள்ளப்பட்டது. அதன் தலைவராக உள்ள ஜப்பானியத் தமிழறிஞர் நொபுறு ஹரஷிமா அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள மற்றைய நாடுகளைக் கேட்காமல் மாநாட்டை நடத்த முடியாது என்றார். அந்நிறுவனத்தின் செயலாளர்களில் நானும் ஒருவன். அதன் இந்தியக் கிளையின் தலைவர் பேராசிரியர் வா. சே. குழந்தைசாமி அவர்கள், நாங்கள் இருவரும் தமிழக அரசினுடைய அழைப்பை ஏற்க வேண்டும் என்று ஹரஷிமாவுக்கு சொன்னோம். அந்தக் கடிதங்கள் யாவும் என்னிடம் உள்ளன.

அனைத்துலக தமிழாராட்சி மாநாடு ஏறத்தாள ஒன்பது வருடங்களாக நடைபெறாதிருந்தமைக்கு காரணம் நிதிப் பிரச்சினையே! இந்த அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இரண்டாவது மாநாட்டை சென்னையில் அறிஞர் அண்ணா நடத்தினார். நான்காவது மாநாடு இலங்கையில் நடைபெற்றது. அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துவது பொருத்தமென்று நாங்கள் கூறினோம். அதனை ஹரஷிமா கடைசி வரை எதிர்த்தார். அந்தக் கட்டத்திலேதான் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப் பட்டது. உலகின் தமிழியல் அறிஞர்கள் எல்லோரும் ஒருங்கு கூடுகின்ற ஓர் அவையில் ஈழத்தின் தமிழின் தொன்மையையும் தொடர்ச்சியையும் பற்றி பேசாமல் விடுவதும் பிழையாகி விடாதா?

இந்தப் பின்புலத்திலேயே நான் செம்மொழி மாநாட்டில் கலந்து கொள்வதெனத் தீர்மானித்தேன். மாநாடு பற்றி அறிவிக்கும் பொழுதே அதன் ஆராய்ச்சிப் பகுதிக்கு பொறுப்பாக இருப்பேன் என்றும் தமிழக அரசினால் அறிவிக்கப்பட்டது. இது நான் கேட்டுப் பெற்றது அல்ல!

மேலும் தனிப்பட்ட நிலையில், நான் இப்பொழுது பயணங்களை மேற்கொள்ளக் கூடிய உடற்சுகம் கொண்டவனல்ல; இருந்தும் இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டதற்கான காரணம் உலகின் முத்தமிழ் அறிஞர்கள் யாவரும் ஒன்றுகூடி தமிழ் - தமிழியல் பற்றிப் பேசும்போது, அதில் ஈழத்தவர்கள் என்ற வகையில் பங்கெடுத்துக் கொள்ளாது விடுவது தவறு என்றே கருதுகின்றேன்.

இலங்கையிலிருந்து கட்டுரைகளைப் பலர் அனுப்பியுள்ளனர். அக்கட்டுரைகளின் தேர்வில் நான் எவ்வித பங்கும் கொள்ளவில்லை. தேர்வுக் குழுவே தெரிவு செய்தது. அதில் நான் தலையிட விரும்பவில்லை.


நாங்கள் இலங்கையர்கள் என்பதற்காக தமிழைக் கைவிடவோ, தமிழர்கள் என்பதனால் இலங்கையைக் கைவிடவோ முடியாது. இந்த அடையாளத்தை நாம் பல நூற்றாண்டு காலமாகப் பேணிவருகின்றோம்.

எனவே, இலங்கைத் தமிழர்களுக்கு அனுதாபமாக கலைஞர் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டை வைத்துக் கொண்டு உலகச் செம்மொழி தமிழ் மாநாட்டை வேண்டாம் என்று ஒதுக்குவதும் ஒதுங்குவதும் எத்துணை பொருந்தும் என்பது எனக்குத் தெரியவில்லை.

**சந்திப்பு: ஜோ. பஸ்ரியாம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைக்கோட்டை அகழ்வின்போது கி. மு. 1500 வருடங்கள் பழைமையான கற்படையில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள்



ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட செம்மண் ஓடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழின் தொன்மைமிகு இலக்கியப் பாரம்பரியம்

**கலாநிதி துரை. மனோகரன்**
தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

தமிழின் தொன்மை உலகறிந்தது. அதேபோல் தமிழிலக்கியத்தின் தொன்மையும் உலகறிந்ததே. உலகின் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழும் அதன் வழிவந்த தமிழ் இலக்கியங்களும் காலங்காலமாக நிலைத்து வந்துள்ளன. தமிழ் இலக்கியத்தின் தொன்மையைப் புலப்படுத்துவனவாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. இன்றைய ஆய்வுநிலையின்படி சங்ககாலம் என்பது, கி.மு 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலமாகும். எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தமிழிலக்கியத்தின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கும் தொகுப்புக்களாகும்.

சங்ககாலம் என்னும் பெயர், முச்சங்கங்கள் இருந்தனவாகக் கருதப்படும் ஐதீகம் தொடர்பாக ஏற்பட்ட பெயராகவே விளங்குகின்றது. கி.பி 3ஆம் நூற்றாண்டுக்கு முன் சங்கம் என்ற சொல் வழக்கிலிருக்கவில்லை. ஆயினும், அக்கால கட்டத்தைக் குறிக்கும் பெயராக அச்சொல் வழக்கில் வந்துவிட்டது. அச்சொல் அக்காலகட்டத்தில் வழக்கில் இல்லாவிடினும் அச்சொல்லுக்குரிய அம்சங்களை உள்ளடக்கிய வெவ்வேறு வகை இலக்கிய அமைப்புக்கள் இருந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

தமிழ்ச்சமுதாயமானது பூர்வீக நிலையிலிருந்து நாகரிக நிலையை நோக்கி அடிபெயரத் தொடங்கிய காலகட்டமாகச் சங்ககாலம் விளங்கியது எனலாம். தமிழ்ச்சமுதாயத்தில் முடியரசின் தோற்றமும் அக்காலகட்டத்திலேயே ஏற்படத் தொடங்கியது. தமிழ்நாட்டின் பல்வேறுபிரதேசங்களிலும் குலமரபுக் குழுக்களாக விளங்கியவை, அவ்வப்போது ஒன்றுடன் ஒன்று மோதி, வென்றவை அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றமையைக்காணலாம். இத்தகைய நிலையில் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று அரசுகள் தோன்றின. அதேவேளையில் தமிழ்நாட்டின் பல்வேறுபிரதேசங்களிலும் பல்வேறு குலமரபுக் குழுக்களைச் சார்ந்த குறுநில மன்னர்களும் ஆட்சி புரிந்தனர்.

பழந்தமிழ் நாடானது வடவேங்கடம் முதல் தென்குமரி வரையிலான பரந்த நிலப்பரப்பையும், பல்வேறு வகைப்பட்ட புவியியல் அமைப்புடைய பிரதேசங்களையும் கொண்டதாக விளங்கியது. பழந்தமிழ் இலக்கியவாதிகள் அவற்றின் தனித்துவமான இயல்புகளை உளங்கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பகுத்தனர்.

பழந்தமிழ் மக்கள் தத்தம் நில இயற்கைக்கு ஏற்பவே வாழ்வியல் அம்சங்களைக் கொண்டிருந்தனர். இவையே திணை எனக் குறிப்பிடப்பட்டன. குறிஞ்சிக்குப் புணர்தலும், முல்லைக்கு இருத்தலும், மருதத்திற்கு ஊடலும், நெய்தலுக்கு இரங்கலும், பாலைக்குப் பிரிதலும் எனத் திணைகள் பகுக்கப்பட்டன. இவற்றோடு கைக்கிளை, பெருந்திணை ஆகியவை அகத்திணை தொடர்பான திணைகளாக விளங்குகின்றன. கைக்கிளை ஒருதலைக்காமமாகவும், பெருந்திணை பொருந்தாக் காமமாகவும் கொள்ளப்படுகின்றன.

பழந்தமிழரின் புறவாழ்வில் போரியல் அம்சங்கள் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்களது போரியல் அம்சங்களும் ஐவகையாகக் குறிப்பிடப்பட்டன. குறிஞ்சிக்கு வெட்சியும், முல்லைக்கு வஞ்சியும், மருதத்திற்கு உழிஞையும், நெய்தலுக்குத் தும்பையும், பாலைக்கு வாகையும் போரியல் பெயர்களாகக் குறிப்பிடப்பட்டன. ஒவ்வொரு இனத்தைச் சார்ந்தவரும் போரிற்குச் செல்லும் போது தத்தம் நிலத்திற்குச் சிறப்பாக இருந்த பூவினைச்சூடிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவற்றோடு, காஞ்சித்திணை, பாடாண்திணை என்பனவும் புறத்திணை சார்ந்த மேலதிகத் திணைகளாகக் காணப்படுகின்றன.

சங்கப்புலவர்கள் அகத்திணை சார்ந்த இலக்கியங்களின் கட்டமைப்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். அகத்திணை இலக்கியங்கள் நாடக வழக்கினையும், உலகியல் வழக்கினையும் அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுத்தொகையில் உள்ள பாடல்கள் பாத்திரக்கூற்றுகளாக அமைந்துள்ளன. அகத்திணை இலக்கியத்தின் அமைப்புக்கு முதல், கரு, உரி என்னும் மூன்று அம்சங்கள் உறுதுணையாக அமைந்தன. சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப் பெறாத காதல் பாடல்கள் அகத்திணையுள் அடக்கப்பட்டன. சுட்டி ஒருவர் பெயர் கூறும் காதல் பாடல்கள் புறத்திணையில் புகுத்தப்பட்டன.

பழமையான சமுதாயங்களிடையே காணப்பட்ட போர் ஆர்வமும், காதல் உணர்வும் சங்ககால மக்களின், வாழ்நெறி முறையிலும் கலந்திருந்தமையால், போரும், காதலும் பழந்தமிழ் இலக்கியத்தில் முதன்மையிடத்தைப் பெற்றன. உள்ளத்து உணர்வோடு தொடர்புடைமையால், காதல் அகம் எனப்பட்டது. போரும், பிற உலகியல் அம்சங்களும் புறவயமானவை என்பதனால், புறம் எனக் குறிப்பிடப்பட்டன. இத்தகைய அடிப்படையிலேயே சங்க இலக்கியங்கள் அகத்திணை, புறத்திணை எனப் பாகுபாடு செய்யப்பட்டன.

பழந்தமிழ் இலக்கியங்களில், தனிச் செய்யுள்களின் தொகுப்புகளாக அமைந்த எட்டு நூல்கள் எட்டுத்தொகை என்ற தொகுப்பிலும், தொடர்நிலைச்செய்யுள்களாக அமைந்த பத்து நெடும்பாட்டுகள் பத்துப்பாட்டு என்னும் தொகுப்பிலும் தொகுக்கப்பட்டன. எட்டுத்தொகையில் அகத்திணை இலக்கியங்கள் மிகுதியாகவும், பத்துப்பாட்டில் புறத்திணை இலக்கியங்கள் மிகுதியாகவும் இடம் பெற்றுள்ளன.

சங்க இலக்கியம் பழந்தமிழ்ச் சமுதாயத்தின் சிந்தனைகளையும், வாழ்நெறியையும் இயல்பாக உணர்த்து கின்றது. ஏறத்தாழ இரண்டு வீதமான வடமொழிச் சொற்களே சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழரின் தொன்மையான இலக்கியப் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் சிறந்த இலக்கியங்களாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.

ஈழநாட்டிலே தமிழ்பேசும் மக்கள் மத்தியில் எழுந்த சிறுவர் இலக்கியம் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழில் சிறுவர் இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி, பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் அடிப்படையிலும் வாய்மொழி மரபுச் சான்றுகளின் அடிப்படையிலும் சுருக்கமாக நோக்கி ஈழத்திற் சிறுவர் இலக்கியத்தின் தோற்றமும் தொடர்ச்சியும் கால ஒழுங்கிலே விரிவாக ஆராயப்படும்.

சிறுவர், பாலர், குழந்தை முதலான சொற்களின் பொருண்மை எவ்வாறு வயது நிலை, மொழி, சுற்றுச் சூழல் பற்றிய அறிவு, கொள்வனவுத் திறன், உளவியற் பாங்கு முதலிய நிலைகளிற் பயன்படுத்தப்படுகின்றது என்பதைக் குறிப்பிட்டு, ஈழத்துச் சிறுவர் இலக்கியம் இந்தப்படிமுறைகளை எந்தளவுக்கு உள்வாங்கியுள்ளது என்பது இக்கட்டுரையிலே தெளிவுபடுத்தப்படும்.

ஈழத்துச் சிறுவர் இலக்கிய கர்த்தாக்களின் கல்விப் பின்னணி, ஆற்றல், அனுபவம் ஆகியவையும் அவர்களின் படைப்புத் திறனும் விமரிசன ரீதியாக விரிவாக நோக்கப்படும். தமிழகத்துச் சிறுவர் இலக்கியங்களுடன் ஈழத்துச் சிறுவர் இலக்கியம் எந்தளவுக்கு இயைவுபடுகின்றது என்பதையும் இக்கட்டுரையிலே சுட்டிக்காட்டப்படுகிறது.

தனிப்பாடல்கள், கதைப்பாடல்கள், கதைகள், நாவல்கள், நாடகங்கள் முதலான சிறுவர் இலக்கிய வகைகள், அவற்றின் பொருளமைதி, மொழி அமைப்பு, உத்திகள், பதிப்பு முறைமை ஆதியாம் அமிசங்களில் ஈழத்துச் சிறுவர் இலக்கியங்களின் வகிபங்கு என்ன என்பதை மதிப்பீடு செய்வது இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

மேலே குறிப்பிட்ட சிறுவர் இலக்கிய வடிவங்களில் எந்த வடிவம் ஈழத்திலே முதன்மை பெற்றுள்ளது என்பதைக் கண்டறிந்து அந்த முதன்மைக்கான காரணிகளும் இக்கட்டுரையிலே முன்வைக்கப்படும்.

ஈழத்துச் சிறுவர் இலக்கியங்கள் நூலுருவில் வெளிவந்தவை, பாடப் புத்தகங்களில் இடம்பெற்றவை, வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றில் இடம்பெற்றவை, பத்திரிகைகளில் வெளிவந்தவை என அமைகின்றன. இவற்றிலே நூலுருவில் வெளிவந்தவற்றை ஆதாரமாகக் கொண்டே இக்கட்டுரை அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மொழி தமிழ்

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்,**
முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர்,
மொழித்துறை, முன்னாள் தலைவர்,
சமூக விஞ்ஞானங்கள், மொழிகள் பீடம்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
இலங்கை.

உலகில் தனித்துவமிக்க செம்மொழி தமிழ் என்பதற்கு ஏராளமான சான்றாதாரங்கள் உள. ஒரு மொழி தனித்துவமிக்கது என்பதனை இக்கால மொழியியலாளர் சிலர் ஏற்றுக் கொள்வதில்லை. எனின் எல்லா மொழிகளும் ஏதோவொரு தனித்துவம் கொண்டனவாகவே அமையும் என்பது அவர்களது வாதம்.

மனிதன் வெளிப்படுத்துவது 'சத்தம்' அல்லது ஓசை என்பதேயாகும். மொழியின் பிறப்பாக்கத்துக்கு மனித உடலிலே உள்ள உதடுகள், வாய், பற்கள், நாக்கு, சுவாசம், தொண்டை, அண்ணம், நெஞ்சு, கழுத்து, மிடறு (குரல்) பேச்சு என்பன அடிப் படைகளாகின்றன.

ஒலிக் கோட்பாடு தொன்மை மிகு செந்தமிழ்ச் செம்மொழிக்கு மிகவும் நுணுக்கமாகவே உண்டு. தமிழிலே ஓசை, சத்தம் குறித்த ஒலிக் கோட்பாடு மிகவும் நுண்ணிதாகவே அமைந்துள்ளது. தமிழிலே ஓசை, சத்தம் என்பன எழுத்துக்களின் பிறப்பிலிருந்தே ஆரம்பமாகின்றன. ''மீ கீழிதழுறப் 'ப' ம்மப் பிறக்கும்'' என்றும் 'அண்ணம் நுனிநா வருடத் 'த' 'ந' வரும் என்று தொல்காப்பியச் சூத்திரம் கூறுவது கருதத்தக்கது.

செம்மொழியான தமிழுக்கு ஒலி வடிவமும் வரி வடிவமும் தொன்மை பெற்றனவாகவே அமைந்துள்ளன. செம்மொழி ஆகிய தமிழுக்கு நீண்டதோர் இலக்கண மரபு - இலக்கணப் பாரம்பரியம் உண்டு. இரட்டை வழக்கு எனப்படும் பேச்சு, எழுத்து என்பன தமிழுக்கு என்றென்றும் உரிய தனித்துவமான சிறப்புகளாகும். எனவே, ஆரம்பத்திலேயே செம்மொழியாகிய தமிழ் மொழியின் தனிச் சிறப்புகள் என்று வரும் பொழுது மொழியின் இரு வடிவங்களான ஒலி, வரி வடிவங்களின் பூர்வீகமான பண்புகள் பற்றிய ஆய்வு முதன்மையாகிறது. அதற்கடுத்துத் தமிழ் மொழியிலுள்ள இரு வழக்குகளான பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்பனவும் மனங் கொள்ளத்தக்கன. இவ்விடத்தில் நீண்ட நெடுங்கால வரலாறு கொண்ட செம்மொழியாகிய தமிழ் மொழியின் பேச்சு மொழி எழுத்து மொழி பற்றிய நுட்பங்களால் தமிழ் செம்மொழித் தன்மை பெறுகிறது என்று துணிதல் வேண்டும். இங்கு குறிப்பிடப்படும் பேச்சு மொழி வரையறையற்றது. எழுத்து மொழி வரையறை உள்ளது. விதி தழுவியது. இவ்விரு பண்புகளும் செம்மொழி ஆகிய தமிழிலே வெகு விரிவாகவே அமைந்துள்ளன.

தொல்காப்பியத்தின் முதன்மை ஒன்றே தமிழ் ஒரு செம்மொழி என்பதற்கு முதன்மைச் சான்றாகிறது. தொல்காப்பிய ஒலிக் கோட்பாடும், இலக்கண விதிமுறைமைகளும், சூத்திர வைப்பும் செம்மொழியாகிய தமிழின் நுட்பமான ஒலி மரபினைப் பறை சாற்றி நிற்கின்றன. அத்துடன் தமிழ் மொழி வெறுமனே ஒரு மொழி மட்டுமன்று, தமிழ் மொழி ஒரு பண்பாடு; தமிழ் மொழி ஒரு கலாசாரம்; தமிழ் மொழி இயற்கையிலேயே இயைந்த கடவுட் கோட்பாட்டையும் வாழ்வியல் நெறிமுறைகளையுங் கொண்டது. மிகப் பழந் தமிழ் நிலத்தில் ''திராவிட மொழிக் குடும்பம்'' என்னும் தனித்துவ மாண்புகளைக் கொண்டு அமைவது தமிழாகிய செம்மொழி. எனவே செம்மொழி பற்றிய ஆய்வு என்பது பூர்வீகமும் தொன்மையும் பண்பாட்டிசைவும், சமய - இறை நம்பிக்கைச் செய்திகளோடு தொடர்புடைய தனித்துவ மகிமை மிக்கமைவது, செம்மொழியான தமிழிலே இன்று வழங்கும் சொற்கள் குறித்த நுண்ணாய்வும் தமிழ் ஒரு செம்மொழியென்று பறைசாற்றி நிற்கிறது. வட மொழியோடு இன்று தொடர்புடைய தமிழ்ச் சமய மரபு, வழிபாட்டு நெறி சொல்லடைவிலும் தமிழோடு தொடர்புறுகிறது. எனினும் தனித்தியங்கவல்லது தமிழ்ச் செம்மொழி.

''கி. மு. ஆறாம் நூற்றாண்டில் பாரசீகப் பேரரசின் கீழ் சிந்து சமவெளி வந்தது. கி. மு. நான்காம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் அதனைக் கைப்பற்றினர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை அவர்களுடைய அரசியற் செல்வாக்கு அம்மண்டலத்தில் நிலவியது. இந்தக் கட்டத்தில் தான் சமஸ்கிருத மொழி உருவாகி வளம் பெற்றது. வட இந்தியப் பண்பாடும் உருவம் பெற்றது. இதுதான் சமஸ்கிருதத்தில் ஐரோப்பிய மொழிகளின் சில சொற்கள் இடம்பெற்ற பின்னணியாகும்'' என்ற கருத்துத் கருதத்தக்கது. வடசொற்கள் தமிழிலும் அபரிமிதமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துள்ளமை கருதத் தக்கது. அவ்வாறு கலப்புறல் நிகழ்ந்தமையாயினும் தமிழ்ச் சொற்களின் செம்மொழித் தன்மை இன்றுவரை மாறவில்லை. சொற்கலப்பிலே தற்சமயம், தற்பவம் என்பன தமிழுக்குரிய தனித்துவமான பண்பாகும்.

''இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்'' என்று கூறுகிறது பிங்கல நிகண்டு. 'தமிழ்' என வழங்கும் இச் சொல்லே பழைமையான சொல் என்பது அறிஞர் வாதம். வழுவில்லாத மரபியலில் மாறாத கருத்துடைய சொற்களால் முறைப்படி அமைந்த தொடர் மொழிகளும் யாப்பியல் முறைப்படி அமைந்த தொடர்மொழிகளும் யாப்பியல் முறைப்படி அமைந்து பலவகை இன்னோசையைத் தரும் பாடல்களும் தமிழ் மொழியில் அதீதமாக உள்ளமையால் தமிழ் ஒரு செம்மொழி எனலாம். பிறிதொரு வகையில், சுருங்கக் கூறின், இன்பமும், பொருளும், அறனும் பயக்கும் அன்பின் ஐந்திணை காமத் திணையை உள்ளடக்கிய பொருளிலக்கணம் பகுதியில் தமிழ் மொழியில் உள்ளன. இவற்றால் தமிழ் மொழியில் இனிமைப் பண்புடைமை விளங்கும்.

**சாசனத் தமிழும் செம்மொழி வரலாறும் :**

தமிழ் நாட்டில் 'தமிழி' எழுத்து கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்து கி. பி. 3 ஆம் நூற்றாண்டு வரை ஏறக்குறைய 600 ஆண்டுகட்கு வழங்கி வந்திருக்கிறது. இவ்வெழுத்துக்களை மலைக் குகைகளிற் காணப்படும் கல் வெட்டுக்களிலும் பானை ஓடுகளின் மீதும் சில காசுகளிலும் காண முடிகிறது. தமிழ்நாடு முழுவதும் இவ்வெழுத்து வழக்கத்திலிருந்திருக்கிறது. குறிப்பாக மதுரையைச் சுற்றியுள்ள பகுதியில் இவ்வெழுத்துக்கள் உள்ள கல்வெட்டுகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இத் 'தமிழி' எழுத்து நாளாவட்டத்தில் இருவகை எழுத்துகளாக வளர்ச்சி பெறலாயின. முதலாவது வட்டெழுத்து; மற்றொன்று இன்றைய 'தமிழ்' எழுத்து. இந்த வளர்ச்சி இற்றைக்கு ஏறக்குறைய 1700 ஆண்டுகட்கு முன்பாக ஏற்பட்டது என்று கருதுவர் அறிஞர்.

வட்டெழுத்து தமிழ் எழுத்து என்பன பழக்கத்தில் இருக்கையிலேயே வேறொரு எழுத்தும் தமிழகத்தில் நிலவியிருக்கிறது. அவ்வெழுத்துக் 'கிரந்த' எழுத்து என்று கூறப்படும். சமஸ்கிருத மொழியின் ஒலிகளைச் சரியாக எழுதுவதற்குக் கிரந்த எழுத்துப் பயன்படுத்தப்பட்டது.

பல்லவர் காலம் முதல் இவ்வெழுத்தைக் கல்வெட்டுகளில் காண முடிகிறது. இன்றைக்கு வழக்கிலுள்ள தமிழ் எழுத்தின் பழைய வடிவத்தைத் தான் 'தமிழி' எழுத்து என்கிறோம். சங்க நூல்கள் அனைத்தும் இந்த எழுத்தில் தான் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வெழுத்துகள் எளிதில் கற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளன. இவை நேர் கோடுகளையும் பக்கக் கோடுகளையுங் கொண்டு விளங்குகின்றன. தமிழ் மொழிக்கே உரிய சிறப்பெழுத்துகளான 'ழ', 'ள', 'ற', 'ன' ஆகிய நான்கு எழுத்துகளையும் பெற்றிருக்கிறது. இந்த வகையில் இவ்வெழுத்து அசோகன் காலத்தியப் 'பிராமி' எழுத்திலிருந்து வேறுபடுகிறது. அசோகன் காலத்திய 'பிராமி' எழுத்தில் மேற்கூறப் பெற்ற சிறப்பெழுத்துகள் காணப்படவில்லை. இதன் காரணமாகத் 'தமிழி' எழுத்தை முன்பெல்லாம் தென்னிந்திய 'பிராமி' என்று அழைத்தனர்.

இந்தியாவில் இன்று வழங்கப் பெறும் எல்லா வகை எழுத்துகளும் 'பிராமி' எழுத்திலிருந்துதான் வளர்ச்சியடைந்தன என்று கூறுவர். அந்தப் 'பிராமி' எழுத்து மொஹஞ்சதாரோ ஹரப்பா களிமண் தகடுகளில் காணப்படும் உருவ எழுத்துகளில் இருந்து வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சாசனத் தமிழியலாய்வில் எழுத்துக் கலையின் தோற்றம், பரிணாமம் பற்றி விரிவாக ஆய்வுகள் நடத்தியுள்ள சுப்பிரமணிய ஐயர், ஏ. கிருஷ்ணசாஸ்திரி, சி. நாராயணராவ், ஐராவதம் மகாதேவன், மயிலை சீனி, வேங்கடசாமி, கலாநிதி நடனகாசிநாதன், ஈழத்தில் பேராசிரியர்கள் சி. பத்மநாதன், கா. இந்திரபாலா, ஆ. வேலுப்பிள்ளை, சி. க. சிற்றம்பலம், பாமு.புஷ்பரத்தினம், செ. கிருஷ்ணராஜா, பொ. இரகுபதி போன்றோரும் இன்னும் சிலரும் ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர்.

தமிழ் வரிவடிவமும், வட்டெழுத்தும் தமிழ் மொழியை எழுதுவதற்கே பயன்பட்டன. வட்டம் பிராமியிலிருந்து தோன்றித் தென்னிந்தியச் சூழலுக்கேற்ப வளர்ந்த வடிவம் என்பாருமுளர். தமிழ் மொழிக்கு வரிவடிவம் இருந்ததற்குச் சான்று தொல் காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலுங் காணப்படுகின்றன. பழைய வட்டெழுத்தின் முன்னோடியே தமிழ்ப் பிராமியைக் குறிப்பன என்பதைப் பழைய சான்றுகளாகக் கொள்ள வேண்டும்.

தமிழகம் கல்வெட்டுகளுக்குப் பெயர் போனது. ஒரு சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே கல்வெட்டுகளைக் கண்டுள்ளது தமிழகம். அன்று முதல் இன்றுவரை ஆயிரக் கணக்கான கல்வெட்டுகளைத் தமிழகத்திற் காணலாம்.

இன்று தமிழகத்திற் கிடைக்கும் கல்வெட்டுகளில் மிகப் பழைமையானவை பிராமி எழுத்துக்களால் ஆனவை. இவற்றைக் கீழ் வளைவு, மறுகால் தலை, ஆனைமலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி, முத்துப்பட்டி, சித்தன்னவாசல், திருவாதவூர், விக்கிரகமங்கலம் போன்ற பல இடங்களில் காணலாம். இவற்றைப் பற்றிய செய்திகள் கி. பி. 1903 இல் நமக்குக் கிடைக்கின்றன. 1903 இல் திரு. வெங்கோவராவும் (கீழ் வளைவு) கி. பி. 1906 இல் கெனமடு அவர்களும் அதன் பின்னர் கிருஷ்ணசாஸ்திரியாரும், கே. வி. சுப்பிரமணிய ஐயரும் இக்கல் வெட்டுகளைக் கண்டுபிடித்தனர். இது போன்றே ஐராவதம் மகாதேவன் திருவாதவூரில் கண்டெடுத்த கல்வெட்டும் பிராமி எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளும் பாண்டிச் சேரிக்கு அண்மையிலுள்ள அரிக்கமேடு என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் உள்ள எழுத்துகளும் தமிழ் மொழியின் செம்மொழியின் பழைமையைப் பறைசாற்றி நிற்கும். இக் கல்வெட்டுகள் அனைத்தும் கி. பி. 3 ஆம் நூற்றாண்டையோ கி. பி. 2 ஆம் நூற்றாண்டையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA

சார்ந்தவைகளாகும். இவற்றுட் பெரும்பாலானவை பல்வேறு குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே இவற்றைக் 'குகைக் கல்வெட்டுகள்' என்று குறிப்பிடுவர். இக்கல்வெட்டுகளுக்கும் இலங்கையில் காணப்படும் குகைக் கல்வெட்டுகளுக்குமிடையே மிகுந்த ஒற்றுமை உண்டு எனக் குறிப்பிடுவர் பலர். 'பிராமி' என்ற சொல்லுக்கு 'எழுத்து' என்றே பொருள் கொள்ளலாம் என்பர். ஐராவதம் மகாதேவனும், ஈரோட்டைச் சேர்ந்த செ. இராசு என்பவரும் கல்வெட்டியல் ஆய்வுத் துறையில் சிறப்பாகப் பணிபுரிந்து வருகின்றனர். செம்மொழியின் தனித்துவச் சிறப்பியல்புகளை அறிவதற்கு இக்கல்வெட்டுகளே பெரிதும் உதவுவனவாகும்.

பிராமிக் கல்வெட்டுகளையடுத்துத் தமிழ் நாட்டில் கிடைப்பது திருநாதர் குன்றுக் கல்வெட்டாகும். தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த இக்கல்வெட்டுத் தமிழ் எழுத்துகளால் ஆனது. கி.பி. 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதனையடுத்து ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் தமிழ் மொழியில் உள்ளன. ஆதிபல்லவச் சாசனங்களில் பிராமியும், தமிழும் தழுவித் தோன்றிய கிரந்த எழுத்துகளும் உள்ளன. இக் கல்வெட்டுகள் எல்லாம் தமிழ் மொழியின் வளர்ச்சியையும் பேச்சு மொழியின் சாயலையும் நன்கு காட்டுவனவாக உள்ளன. இலக்கிய மொழிக்கும் கல்வெட்டுகளில் காணப்படும் மொழிக்குமிடையே பல வேற்றுமைகள் உள்ளன. இலக்கிய மொழியில் ஏறாத பல பேச்சு வழக்குகள் கல்வெட்டு மொழியில் ஏறியிருக்கக் காணலாம். எனவே இம்மொழி வழக்குகளை ஆராயின் பண்டைக்காலப் பேச்சு வழக்கு மொழியினைப் பற்றிய உண்மை நிலையை அறிய முடியும். பேராசிரியர் டாக்டர் க. கணபதிப்பிள்ளை, ஜெயகுமாரி, பகீரதி கௌசல்யா, டாக்டர் ச. அகத்தியலிங்கம், திரு. செ. வை. சண்முகம் போன்றோர் தமிழ்க் கல்வெட்டுகளைப் பற்றி மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்துள்ளனர்.

கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்து வடிவங்கள் பற்றி ஐராவதம் மகாதேவனின் கருத்துக்களை 1972 இல் இரா. நாகசாமி தொகுத்துத் தந்துள்ளார். தொல்காப்பியத்துக்கும் முற்பட்ட தமிழர் மரபுகளை இக் கல்வெட்டுக்களால் அறிய முடியும். பிராமிக் சாசனங்கள் பற்றிய செய்திகளாகவே இவை அமைந்துள்ளன. இப்பண்புகள் அனைத்திலும் தமிழ் ஒரு செம்மொழி என்பது உறுதிபட நிறுவப்படும்.

தமிழகத்தில் பௌத்தத்தை விடச் சமண சமயமே செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதும் இக்கல்வெட்டுகளின் மூலம் தெரிய வருகிறது. ஈழத்திலோ பௌத்தமே செல்வாக்குப் பெற்றிருந்தது. சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் இம் மதங்களை ஆதரித்ததை இக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

கல்வெட்டுகளைப் போன்றே நாணயங்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். சமகாலத்திலுள்ளவர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களின் அமைப்பு, பயன்படுத்தப்பட்ட உலோகம் போன்றவை அக்காலத்துச் சிறப்பியல்புகள் பற்றி எடுத்துக் கூறும் தன்மை வாய்ந்தவையாகும்.

அத்துடன் இவை காணப்படும் இடங்கள் குறிப்பிட்ட காலத்து அரசியல், வணிக, கலாசாரப் படர்க்கையைப் பிரதிபலிப்பனவாகவும் அமைகின்றன. இந்நாணயங்களில் காணப்படும் மன்னர் உருவங்கள், குறிகள், எழுத்துகள் ஆகியனவும் அக்காலம் பற்றிய மேலும் பல தகவல்களைத் தர உதவியாக அமைகின்றன. தமிழகத்தில் இக்காலப் பகுதியில் உள்ளூர் நாணயங்களை விட வெளிநாட்டு நாணயங்களான உரோம, சீன நாணயங்களும் கிடைக்கின்றன. இவை அக்காலத்தில் தமிழகம் இந்நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பினை விளக்குவனவாகக் காணப்படுகின்றன. பண்டைய இந்திய நாணயங்கள் அச்சுக் குத்திய நாணயங்கள் (Punch Marked Coins) என அழைக்கப்படுகின்றன. இத்தகைய நாணயங்களே ஈழத்தின் பழைய நாணயங்களாகவும் விளங்குகின்றன. இவை கி. மு. 500 ஆம் ஆண்டளவில் இந்தியாவிலே தோன்றியிருக்கலாமெனக் கருதப்படுகிறது. சேர மன்னர்களால் மத்திய காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் யானையின் உருவம் இலச்சினையாக இருப்பதால் சங்க காலத்திலும் இவ்வாறே அமைந்திருக்கலாமென இரா. நாகசாமி கருதுகிறார். அத்துடன் சங்க இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்தின் பதினோராவது பாடலின் பத்தொன்பதாவது வரியில் சேரமன்னர்கள் கழுத்தின் மேலே அமர்ந்து செல்பவர்கள் என்ற குறிப்பை இந்நாணயங்களில் காணப்படும் யானையின் கழுத்தின் மேற்காணப்படும் மனித உருவம் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்பதையும் இவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

செம்மொழியான தமிழ் மொழி இலக்கிய மொழியாக வளம் பெற்ற மொழியாக மட்டுமன்றி கல்வெட்டு மொழியாகவும் நாணயங்களின் மொழியாகவும் சிறப்புப் பெற்றிருந்தமையை இவை சான்றுகளாக உறுதி செய்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவ சித்தாந்த முத்தியும் சங்கர வேதாந்த முத்தியும்

## -ஓர் ஒப்பீட்டாய்வு

**பேராசிரியர் முனைவர் ந. ஞானகுமாரன்**
பீடாதிபதி - கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

முப்பொருள் வாதம் பேசும் சைவ சித்தாந்தமும் ஒருமை வாதம் பேசும் சங்கர வேதாந்தமும் முத்தி நிலை பற்றி எடுத்தாளுகையில் ஒற்றுமைப்பட்டும் வேறுபட்டும் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். முத்தி என்பது வீடு, மோட்சம், நிர்வாணம், விடுதலை, சுதந்திரம் எனப் பொருள் படுவதாகும். சைவ சித்தாந்தத்தின் வேதாந்தத்தின் உயரிய நோக்காகவும் உன்னத இலட்சியமாகவும் முத்தியானது அமைகின்றது. சைவ சித்தாந்தத்தில் மூன்று பொருட்களான பதி, பசு, பாசம் ஆகியவற்றிக்கிடையில் தர்க்க ரீதியான உறவு நிலையின் அடிப்படையில் பசுவானது பாச நீக்கத்தின் அடிப்படையில் முத்தியடைவது பொதுவில் எடுத்தாளப்படுகின்றது. சங்கர வேதாந்தத்திலும் ஒருமைத்துவமான பிரம்ம ஞானத்தினைக் கைவரப் பெறுவதானது, அதாவது முத்தியடைவதானது அறியாமையை அகற்றி ஞானத்தினை ஆத்மன் உணர்வதாகின்றது. இங்கு சைவ சித்தாந்தமும் வேதாந்தமும் அழுக்கானதாகக் கருதப் பெறும் பாச நீக்கத்தினால் அல்லது அஞ்ஞான நீக்கத்தினால் முத்தியடையப் பெறலாம் என்பதனை வலியுறுத்தி நிற்கின்றன.

முப்பொருள் கூறும் சித்தாந்தம் ஆன்மா நான்கு மார்க்கங்களினூடாக முத்தியடையலாம் என எடுத்தாளும், அதேவேளை முத்தியினை நான்கு வகையாக விளக்கி நிற்கின்றது. சுத்தாத்வைதமாக எடுத்தாளப்படும் சைவ சித்தாந்தம் முத்தியினையும் இறுதி நிலையில் ஒன்றாம் தன்மைக்குரியதாகவே விளக்கி நிற்கின்றமையும் இங்கு சுட்டுதற்குரியதாகும். சமீப முத்தி, சாரூப முத்தி, சாலோப முத்தி, சாயுச்சிய முத்தி என நாற்பாத நிலைக்கு அமைவாக நான்காக எடுத்தாண்ட போதிலும் பதமுத்தி, பரமுத்தி என அவற்றை மேலும் இரண்டாகவும் விளக்கி முத்தி நிலையினை நுட்பமாக எடுத்தாளுதல் ஆய்வுக்கு உரியதாகும். ஒருமைவாதம் சுட்டும் வேதாந்தமும் முத்தி நிலையை ஒரு நிலைக்குரியதாகவே விளக்கி நிற்கின்றமை காணலாம். எனினும் இரு தத்துவ அமைப்புகளின் அடிப்படை வேறுபாட்டிற்கமைய இரு தரிசனங்களும் இம் முத்தி நிலையினை அடையப் பெறும் வழிமுறையில் வேறுபாட்டையும் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஞானமார்க்கத்தினை முத்திக்குரிய முதன்மை மார்க்கமாக வேதாந்தம் வலியுறுத்தி நிற்கின்ற வகையில், இந்திய தரிசனங்கள் அனைத்திலிருந்து இது வேறுபட்டுத் தனித்துவமான தரிசன மொன்றாக அமைகின்றது. பிரம்மம் முழுமையான உண்மைப் பொருளாகவும் ஞான சொரூபமானதாகவும் விளங்குவதாகச் சங்கர வேதாந்தம் எடுத்தாளும் ஞானமே வடிவான பிரம்மமானது அஞ்ஞானத்தின் இணைவினால் ஞானமான உண்மைத் தன்மையை உணராது துன்பத்திற்கு உரியதாக அல்லலுறுகின்றது. அஞ்ஞானம் மாயை எனப்படுகின்றது. இம்மாயையின் தாக்கத்தினால் உண்மையான பிரம்மத்தின் ஞானத் தன்மை தெரிய வொட்டாது போகின்றது. எப்போது பிரம்மத்தின் உண்மையான நிலை உணரப் படுகின்றதோ அப்போதே முத்தியானது கைவரப் பெறுமென்பது சங்கர வேதாந்திகளது விளக்கமாகின்றது. எனவே ஞானமே முத்தியினை அடைதற்குரிய ஒரேயொரு வழியாக எடுத்தாளப்படுவது எத்துணை தூரம் பொருத்தமானது என்பது இங்கு ஆராயத்தக்கதாகின்றது. அதேவேளை சைவ சித்தாந்தமானது சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களை ஏற்பதுடன் பக்தி மார்க்கம், கர்ம மார்க்கம், யோக மார்க்கம், ஞான மார்க்கம் ஆகிய மார்க்கங்களின் வழிகளில் முத்தியடைதல் சாத்தியம் என விளக்கி நின்றது. முத்தியடைதலுக்குரிய இம் மார்க்கங்கள் பலவெனினும் இம் மார்க்கங்களினை நுணுகி ஆராயுமிடத்து சங்கர வேதாந்தத்திற்கு அயலாக சித்தாந்த விளக்கங்களும் பெரிதும் ஒட்டி வருதல் நோக்கத்தக் கதாகும்.

மேலும் முத்தியானது மேலான இலட்சியமாக இரு தரிசனங்களாலும் எடுத்தாளப்பட்ட போதிலும் முத்தியின் இயல்பு, தன்மை, பண்பு போன்ற தன்மைகளில் பெரிதும் ஒத்த இயல்பினைக் கொண்டுள்ளமையும் இங்கு வெளிக் கொணரத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளில் பயிற்று மொழியாகத் தமிழ்

## - ஓர் ஒப்பு நோக்கு

**முனைவர் (திருமதி) அனுஷ்யா சத்தியசீலன்**
முதுநிலை விரிவுரையாளர் தரம் - 1
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில் தாய் மொழி / மொழிகள் கல்வி மொழியாக்கப்பட்ட போதும் இன்னமும் அதில் தடுமாற்றங்கள் காணப்படவே செய்கின்றன. தாய் மொழியூடான கல்வி என்று சிந்திப்பது ஒரு குறிப்பிடத்தக்க தொகையினருக்குச் சற்றுக் கடினமானதாகவே உள்ளது. அவர்கள் தாய்மொழி வழிக்கல்வி என்பது ஆங்கில மொழி வழிக் கல்வித் தரத்தினை ஒத்தது அல்லது அதிலும் சிறப்புமிக்கது என்பதில் இன்னமும் ஐயுறவு கொண்டவர்களாகவே உள்ளனர். விசேடமாகப் பிள்ளைகள் உயர் கல்வியில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் கல்வியைத் தொடர்வதற்கு பாடசாலை தாய்மொழிக் கல்விச் செயற்பாடுகள் பொருத்தமானதாக அமையாது என்பதும், பொதுப் பரீட்சைக்கு ஆங்கிலமே தகுதியானது என்பதும் உயர் தொழிற்றகமையைப் பெறுதல் என்பது ஆங்கிலத்தினூடாகவே சாத்தியம் என்பதும் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

உலக மயமாக்கல், சர்வதேச ஒப்பீடு போன்ற விடயங்கள் தாய் மொழியிலான அவர்களின் நம்பிக்கையின்மையை மேலும் வலுப் படுத்துகின்றன. பயிற்றுமொழியொன்றின் பொருத்தப்பாடானது அரசியல், பொருளாதார அடிப்படையில் தீர்மானிக்கப்படுதலென்பது வரவேற்கத்தக்கதல்ல. அது கல்வியின் அடிப்படை நோக்கங்களைச் சிதறடித்து விடும். மாறாகக் கற்றலின் ஒரு சாதனமாக அதன் தகுதியின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். கற்றற் செயற்பாடுகளான கேட்டல், கிரகித்தல், தெளிதல், சிந்தித்தல், வெளிப்படுத்தல், தொடர்பாடல் என்பன இல்லாது விட்டால் கற்றல் இடம்பெறாது என்பதனையும் நீடித்திருக்க மாட்டாது என்பதனையும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இத்தகைய பின்புலத்தில்

1) தமிழ் நாடு, இலங்கைப் பாடசாலைகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாக்கப்பட்டதன் பின்புலத்தையறிதல்
2) சுதந்திரத்தின் பின்னர் தமிழ்நாடு, இலங்கையில் பாடசாலைகளில் தமிழ் மொழிவழிக் கல்வி தொடர்பான கொள்கைகள், போக்குகளைச் சுருக்கமாக நோக்குதல்
3) பாடசாலைகளில் தமிழ் வழிக் கல்வி தொடர்பாக இவ்விரு பக்கக் கருத்துக்களை மாணவர், ஆசிரியர், பெற்றோர் சார்பாக
   i. வினைத்திறன் மிக்க கற்றல்
   ii. கற்றலுக்கான தூண்டல்
   iii. ஆளுமைவிருத்தி
   iv. கல்வி அடைவும் தொழில் மேம்பாடும்
   v. வளக்கிடைப்பனவு
   vi. சர்வதேசக் கணிப்பு
   vii. பொது என்ற அம்சங்களின் கீழ் ஒப்பிட்டு ஆராய்தல்

என்ற நோக்கங்களை உள்ளடக்கியதாக இவ்வாய்வுக் கட்டுரை இடம்பெறுகின்றது.

பிரித்தானிய இந்தியாவில் 1835 இல் இடம்பெற்ற மக்காலே அறிக்கை ஆங்கில மொழி மூலக் கல்வியின் முதன்மைக்கு வழிவகுத்தது. இரத்தத்தாலும் நிறத்தாலும் இந்தியராகவும் செயலிலும் சிந்தனையிலும் ஆங்கிலேயராகவும் இருக்கக் கூடிய மக்கள் தொகுதியொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் இடம்பெற்ற அவ் அறிக்கையைத் தொடர்ந்து ஆங்கில வழிக்கல்வி மிகுந்த செல்வாக்குப் பெற்றது. அதனையடுத்து அரசு மதராஸ் பிரசிடென்சியை அரசாங்கப் பணத்தை ஆங்கிலக் கல்விக்காகச் செலவிடும்படி ஆலோசனை வழங்கியது. அவ்வறிக்கையைத் தொடர்ந்து சுதேச மொழிக் கல்விச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் பின்தள்ளப்பட்டு, ஆங்கில மொழிவழிக் கல்வி முனைப்புப்படுத்தப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பிரித்தானியராட்சியின் ஆரம்பக் காலங்களில் (1796 - 1833) பிரித்தானிய தேசாதிபதிகளின் விருப்பு, அவ்வவ் காலச் சூழல் என்பனவற்றின் அடிப்படையில் பயிற்று மொழித் தீர்மானம் ஆங்கிலம் அல்லது சுதேச மொழிகள் (தமிழ், சிங்களம்) என்பதாக இடம்பெற்றது. ஆயினும் 1833 இல் இடம் பெற்ற கோல்புறூக் அறிக்கையைத் தொடர்ந்து ஆங்கிலம் முறைப்படி பயிற்று மொழியாக, நிர்வாக மொழியாக அந்தஸ்துப் பெற்றுக் கொண்டது. சுதேசிய தாய்மொழி வழிப் பாடசாலைகள் மூடப்பட வேண்டுமெனவும், ஆங்கிலப் பாடசாலைகளின்பால் அரசு கவனம் செலுத்த வேண்டுமெனவும் ஆங்கிலம் தெரியாதோர் ஆசிரியர்களாக வரத் தகுதியற்றவர்கள் எனவும் கருதி கோல்புறூக் குழுவினர் சிபார்சுகளை முன் வைத்தனர்.

ஆயினும் 1865, 1905, 1911 - 12, 1926 காலப் பகுதிகளில் முறையே மோர்கன் அறிக்கை, வேஸ் அறிக்கை, பிரிட்ஜ் - மக்ரிலியட் அறிக்கை, மக்ரே அறிக்கை, தாய்மொழி (தமிழ் அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமொழி) வழிக்கல்விக்கு ஆதரவு நல்கியனவாக அமைந்தன. 1943 இன் கல்வி விசேட குழுவினரின் (கன்னங்கரா குழு) கல்விச் சிபார்சு தாய்மொழி வழிக் கல்விக்கு உயிர்ப்பளித்ததாக காணப்பட்டது.

1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்றது. அதனைத் தொடர்ந்து தாய்மொழி வழிக் கல்வி பற்றிய அழுத்தங்கள் காலத்திற்குக் காலம் கொடுக்கப்பட்டன. 1956 இல் மொழி வாரி மாநிலங்களாக இந்தியா பிரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து தாய்மொழி அல்லது மாநில மொழி பயிற்று மொழியாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பொதுவாக முனைப்புப் பெற்றது.

1956 இன் கல்வி வெள்ளையறிக்கை விவாதங்களைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட குழுவானது பயிற்று மொழியாக மாநில மொழியின் / தாய்மொழியின் நிலைமை காத்திரமாக இடம்பெற்றுள்ளதென் பதனைக் குறிப்பிட்டு ஆங்கிலத்தினின்றும் தாய் மொழிக்கான முழுமையான மாற்றங்கள் எல்லா கல்வி மட்டங்களிலும் ஏற்படுவதற்கு கால அவகாசம் தேவை என்றும் இருப்பினும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், இதர வாண்மைசார் அறிவுக்கு ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி தேவையென்றும் குறிப்பிட்டிருந்தது.

தமிழ் நிறுவனங்களையும் தமிழ் ஆர்வலர்களையும் பொறுத்த மட்டில் பாடசாலைகளில் பயிற்று மொழியாகத் தமிழ் இடம்பெற வேண்டுமென்பதற்கான வற்புறுத்தல்களை அரசிடம் விடுத்து வந்தனர். ஆங்கில மொழிப் பாடசாலைகள் 1 ஆம் தரத்திலிருந்து ஆங்கிலத்தை பயிற்று மொழியாக்கியது மட்டுமன்றி தமிழை ஒரு பாடமாகத் தன்னும் போதிக்கவில்லை என்பது அவர்களது ஆதங்கமாக இருந்தது. ஒரு சில ஆங்கில மொழிப் பாடசாலைகளில் பாடசாலை இடைவேளை நேரங்களில் கூட தமிழைப் பேசுவதற்கு தடை விதிக்கப்பட்டமையும், மீறப்படுமிடத்து தண்டனை வழங்கப் பட்டமையும் சாதாரண சம்பவங்களாயின.

இன்றைய சூழலில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தரம் I-V வரை தாய் மொழி வழிக் கல்வி மட்ரிகுலேஷன், மத்திய பாடசாலைகள் தவிர்ந்த ஏனையவற்றில் இடம்பெறுகின்றன. உயர் இடைநிலையில் இரு மொழிக் கல்வி (Bilingual) எனக் குறிப்பிடப் பட்டாலும் ஆங்கிலத்தின் செல்வாக்கு அதிகரித்துக் காணப் படுகின்றமை பொதுப் பண்பாக உள்ளது. இலங்கையில் 1948 இன் சுதந்திரத்தைத் தொடர்ந்து 1950 இல் வெளியிடப்பட்ட கருத்துக்களின் அடிப்படையாக பின்வருவன இடம்பெற்றன :

1. குழந்தை வீட்டு மொழியில் கற்பிக்கப்பட வேண்டும்.
2. சர்வதேசப் பண்பாட்டுக்கும் மேற்கத்தைய சிந்தனைக்கும் வாயிலான ஒரு ஊடகத்தின் தேவை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

1950 இல் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி கல்வி மொழிகளாக தமிழ், சிங்களம் என்பவைகளின் உபயோகத்தை கொண்டு வருவதற்கு நிலைமை பொருத்தமானது எனக் காணுமிடத்து அத்தகைய மாற்றத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் கல்வி மந்திரிக்கு வழங்கப்பட்டது. மொழி மாற்றத்திற்கான அமைச்சரவைப் பிரகடனங்கள் அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் பட்டன.

ஆயினும் 1977 ஐத் தொடர்ந்து இலங்கை அரசினால் ஆங்கிலத்தின் பால் கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக நாட்டில் சர்வதேசப் பாடசாலைகள் தோற்றம் பெற்றன. நாட்டின் சமூக நிரலமைப்பில் உயர் நிலையிலிருந்தோர் தம் பிள்ளைகளை ஆங்கிலக் கல்வியினூடான சர்வதேசப் பாடசாலைகள் நோக்கி நகர்த்தினர். அதனால் தவிர்க்க முடியாதவாறு அரசாங்கப் பாடசாலைகளில் பயிற்று மொழியாக ஆங்கிலம் மீள் அறிமுகம் செய்யப்பட்டது. ஆயின் இது திணிப்பதாகவன்றி விருப்பத்தின் பேரில் என்பதான நடைமுறை காணப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் மாணவர்கள், ஆசிரியர், பெற்றோர் பெருமளவில் தமிழ் மொழி வழிக் கல்வியினை ஆதரிப்பவர்களாகவே காணப்படுகின்றனர். அது மட்டுமல்ல மொழி என்பது 'தமது இனத் தனித்துவத்தின் அடையாளம்' என்பதிலும் அவர்கள் ஆணித்தரமான கருத்தினை வெளியிட்டிருந்தனர். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஒப்பீட்டடிப்படையில் தமிழ் மொழி வழிக் கல்வியின் பயன்பாடு குறைவாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் வளக் கிடைப்பனவு, சர்வதேசக் கணிப்பு, கல்வி அடைவும் தொழில் மேம்பாடும் பொறுத்து தமிழ் மொழி மூலக் கல்வி குறிப்பிடத்தக்க அளவில் நிராகரிக்கப்பட்டிருந்தது. அது மட்டுமன்றி மொழி என்பது ஒரு இனத்தின் தனித்துவ அடையாளம் என்பது பற்றிய சிந்தனை அவர்களிடம் இழையோடியதனையும் ஆய்வாளரால் உணர முடியவில்லை.

தமிழ் 'செம்மொழி' யாகக் கருதப்பட்டு போற்றப்படும் இன்றைய சூழலில் தமிழைப் பயிற்று மொழியாகப் பாடசாலை மட்டத்தில் பயன் படுத்துவதில் பல்வேறு கருத்து அபிப்பிராயங்களும், தொய்வு நிலைமைகளும் காணப்படுவது கவலைக்குரியதாகவே இருக்கின்றது. தமிழ் செம்மொழி மகாநாடு நடத்தப்படும் இன்றைய காலகட்டத்தில் தமிழ் நாடு, இலங்கை என்ற இரு நாடுகளிலும் தமிழ் மொழியின் பயிற்று மொழி அந்தஸ்தினை அளவிடுவதும், ஸ்திரப் படுத்துவதற்கான வழிமுறைகளை முன் வைப்பதும் தமிழ் அறிஞர்கள் ஒவ்வொருவரினதும் தலையாய பணியாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மொழி மாநாட்டில் இலங்கைக் கலைஞர்கள்

கோவையில் நடைபெறுகின்ற உலகச் செம்மொழி மாநாட்டைச் சிறப்பிக்கும் முகமாக இலங்கையில் இருந்து 20 க்கும் மேற்பட்ட கலைஞர்கள், கலாவித்தகர்கள் கலந்துகொள்கிறார்கள். இலங்கையின் வடகிழக்கு பிரதேசத்திற்கு உரியகலைமரபான வடமோடி, தென்மோடி கூத்துக்கள், மலையக மண்ணுக்குரிய கலைமரபான காமன் கூத்து மற்றும் தமிழர்களின் வாழ்வியலுடன் தொடர்புபட்ட தமிழ் மரபு சார்ந்த கலைகள் மா நாட்டு மேடையில் அளிக்கை செய்யப்படவிருக்கிறன.

மலையக மக்கள் கலை அரங்கு கலைஞர்கள் அளிக்கை செய்யவுள்ள காமன் கூத்தை சு.முரளிதரன் வழிகாட்டலில் அண்ணாவியார் பிரான்சிஸ் ஹெலன் நெறியாள்கை செய்கின்றார். பொதுவாக தோட்டப்பகுதிகளில் மாசிமாதத்தின் மூன்றாம் பிறைக்காலத்தில் காமன் கூத்து ஆரம்பமாகும். காமன் கூத்தின் குறிகருத்தானது பலர் கூடி ஒரு உதவியை கேட்கும்போது, அதைநிறைவேற்றுவதற்கு எப்போதும் தயாராக இருத்தல் வேண்டும். சில வேளை மாபெரும் சக்திக்கு எதிராகக் கூட போராட வேண்டியதாக அமையும். மன்மதன் தேவர்களுக்கு உதவி செய்ய வேண்டி, சகல வல்லமை பொருந்திய இறைவனுக்கு எதிராக கிளர்ந்தெழும் அம்சம் தொழிலாளர்களின் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்த ஒன்றாக அமைகின்றது. மலையக மக்கள் சுயநலன் கருதியல்ல; பொதுநலன் கருதி, அடக்குமுறைகளுக்கு எதிராக யாரும் குரல் கொடுக்க முன்வரவேண்டும். அது எவ்வளவு பெரிய சக்தியாக இருந்தாலும் அது குறித்து அஞ்சக் கூடாது என்பதை காமன்கூத்தின் உட்பொருள் இயம்புகின்றது. 16 முதல் 18 நாட்களுக்கு தொடர்ச்சியாக கூத்து நடைபெறும். காமன் கூத்தின் முக்கிய அம்சங்கள் பின்வரும் தொடர்ஒழுங்கில் அமைகின்றன. கப்பம் பாலித்தலும் காப்புக்கட்டலும், காமன் ஊன்றுதல், ரதி - மன்மத திருமணம், காமன் ஆட்டத் தொடக்கமும் நிகழ்த்துகையும், காமன் தகனம், உயிர் எழுப்பும் நிகழ்ச்சி, காமன் விருந்து ஆகிய அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றது. இக்கூத்தில் நடேசன் சாம்பசிவமூர்த்தி (மன்மதன்), ரவீந்திரன் ஸ்ரீநிவேதா(ரதி), பெரியசாமி விஜேகோபால்(இந்திரன், தூதன், எமன்), சுப்பிரமணியம் பிரேம்குமார் (தேவேந்திரன், சிவன்), திருமதி ரட்ணம் ஜெயநந்தினி(குறத்தி), மாரி தியாகராஜா( பூசாரி, கோமாளி), வேலாயுதம் இராமர், சின்னையா போல் பெரேரா (தப்பிசை), திருமதி வசந்தி ஹெலன், திருமதி கிறிஸ்டிலா இராமர்( உடையலங்காரம்), செல்வி பழனியாண்டி டலாதேவி (ஒப்பனை) ஆகிய கலைஞர்கள் சிறப்பிக்கவுள்ளார்கள்.

வாசுகி ஜெகதீஸ்வரனின் நாட்டிய கலாமந்திர் கலை நிறுவனத்தைச் சேர்ந்த கலைஞர்கள் பங்குபற்றுகின்ற, இலங்கை வாழ் தமிழர்களின் வாழ்வியலுடன் தொடர்புபட்ட தமிழ் மரபு சார்ந்த கலைத்துவக் கருத்துகள் ஆடல் வடிவமாக படைக்கப்படவிருக்கின்றன. இலங்கையில் பிரசித்தம் வாய்ந்த மூன்று நிகழ்வுகளை சித்திரிப்பதாக இந்த ஆடல்வடிவங்கள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. வடபகுதியில் பிரசித்தம் பெற்ற முருகன் ஆலயமான நல்லையம்பதி திருவிழாக் காட்சியைச் சித்திரிக்கும் விதத்தில் யோகர் சுவாமிகளின் பாடலை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிகழ்வும், கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வியப்புமிகு திருவிழாக் காட்சியமைப்புகளைச் சித்திரிக்கும் அருணகிரிநாதரின் திருப்புகழை அடிப்படையாகக் கொண்டு நெறியாக்கம் செய்யப்பட்ட நிகழ்வு இன்னொன்றும், மலையகக் கலைத்துவத்தை வெளிப்படுத்தும் விதத்தில் தொழில் சார் சம்பவங்களை உள்ளடக்கிய மலையக மக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்ட ஆடல் வகைகள் இன்னொன்றுமாக மூன்று நிகழ்வுகளை நாட்டிய கலாமந்திர் நடன விற்பன்னர்கள் வழங்கவுள்ளனர். நடன அமைப்பு மற்றும் நெறியாள்கை கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன், நிகழ்ச்சித்தயாரிப்பு சிரேஷ்ட ஒளிபரப்பாளர் எஸ் விஸ்வநாதன் ஆகியோராவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# அமைதி வழி காட்டும்



பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் -
பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்!
உண்பது நாழி உடுப்பது இரண்டே
உறைவிடம் என்பது ஒன்றேயென
உரைத்து வாழ்ந்தோம் -
உழைத்து வாழ்வோம்.
தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும்
நன் மொழியே நம் பொன் மொழியாம்!
போரைப் புறம் தள்ளி
பொருளைப் பொதுவாக்கவே
அமைதி வழி காட்டும்
அன்பு மொழி
அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்!
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்! (4)
ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே
உணர்ந்திடும் உடலமைப்பை பகுத்துக் கூறும் (2)
ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்
ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு
ஒலிக்கின்ற சிலம்பும், மேகலையும்
சிந்தாமணியுடனே வளையாபதி குண்டலகேசியும்
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்! (4)
கம்ப நாட்டாழ்வாரும்
கவியரசி அவ்வை நல்லாளும்
எம்மதமும் ஏற்றுப் புகழ்கின்ற
எத்தனையோ ஆயிரம் கவிதை நெய்வோர் - தரும்
புத்தாடை அனைத்துக்கும்
வித்தாக விளங்கும் மொழி
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்! (3)
அகமென்றும் புறமென்றும் வாழ்வை
அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனிய மொழி
ஓதி வளரும் உயிரான உலக மொழி (2)
நம் மொழி - நம் மொழி - அதுவே
செம்மொழியான தமிழ் மொழியாம்
தமிழ் மொழி... தமிழ் மொழி... தமிழ் மொழியாம்
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்! (4)
தமிழ் மொழியாம் எங்கள் தமிழ் மொழியாம் (2)
வாழிய வாழியவே! வாழிய வாழியவே! வாழிய வாழியவே!(2)

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கென முதல்வர் கருணாநிதி எழுதிய சிறப்பு கவிவரிக்கு இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான் இசையமைக்க, இயக்குநர் கௌதம் மேனன் காட்சியமைத்துள்ளார். இச்சிறப்பான பாடலை இசையுலகின் மூன்று தலைமுறைப் பாடகர்கள் பாடியுள்ளனர்.

ஏ.ஆர். ரஹ்மான், டி. எம். சௌந்தரராஜன். டி.எல். மகாராஜன், பி. சுசீலா, ஹரிஹரன், நித்யஸ்ரீ மகாதேவன், சின்ன பொண்ணு, ஸ்ரீநிவாஸ், ப்ளேஸ், கார்த்திக், நரேஷ் ஐயர், சின்மயி, ஸ்வேதா மோகன், ஹரிணி, சுருதி ஹாசன், யுவன் சங்கர் ராஜா, விஜய் ஜேசுதாஸ், குணசேகரன், டி.எம்.கிருஷ்ணன், அருணா சாய்ராம், சௌமியா, ஜி. வி. பிரகாஷ், ரெஹானா, சுசீலா ராமன், கிரிஷ், மும்பை ஜெயஸ்ரீ, நாகூர் சகோதரர்கள் ஆகிய பாடகர்கள் இணைந்து பாடியுள்ளார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுதந்திரத்துக்குப் பின் இலங்கையின் எழுத்தறிவு வீதம்

**முனைவர் திருமதி. ஜெயலக்சுமி இராசநாயகம்**
முதுநிலை விரிவுரையாளர்,
கல்வியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

ஒருவனுடைய மொழிப் பாவனையில் முக்கியத்துவம் பெறுவது எழுத்தறிவு ஆகும். எழுத்தறிவு என்பது தனித்து எழுத்து என்ற செயற்பாட்டுடன் மட்டும் நின்று விடுவதில்லை. குறிப்பிட்ட மொழி ஒன்றினை எழுதுதல், வாசித்தல், விளங்கிக் கொள்ளல் போன்ற திறன்களை எல்லாம் எழுத்தறிவு எனக்கொள்ளலாம். மேலதிகமாக வேறு பல மொழிகளைப் பேசுதல், எழுதுதல், வாசித்தல் என்பவற்றிலான திறன்களைப் பெற்றிருப்பதன் மூலம் பல நன்மைகள் கிடைக்கப் பெறுகிறன.

இன்று இலங்கையில் இலவசக் கல்வித்திட்டம் நடைமுறையில் உள்ளது. இலங்கை அரசு எழுத்தறிவு வீதத்தை அதிகரிக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எழுத்து என்பது மக்களது தொடர்பாடலுக்குரிய ஒரு வலுவான சாதனம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அறிவுச் செயற்பாடுகளைப் பரவலாக்குவதற்கு எழுத்தறிவு மிக முக்கியம் ஆகும். அத்துடன் மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் மனிதர்களுக்கிடையேயான இடைத் தொடர்புகள் வளர்ச்சி பெறவும் இவை உதவியுள்ளன.

இன்று எழுத்தறிவு வீதம் அதிகரிப்பது இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். எங்கேயும் எழுதி வைக்கப்பட்ட விடயங்கள் பெறுமதி வாய்ந்ததாகும். இதனால் கடந்த காலத்தின் வரலாறுகள் இன்று கருப்பொருட்கள் ஆகின்றன. மனிதன் நினைவில் வைத்திருக்க வேண்டிய பல விடயங்கள் இன்று எழுத்துக்கள் மூலம் ஆவணப்படுத்தப்பட்டமையால் இன்றைய சந்ததியினருக்கு அவை பெருமளவில் உதவுகின்றன. எழுத்தறிவுடையவன் பல விடயங்களை இலகுவில் நிறைவேற்றி விடுகிறான்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் பாவனையில் இருக்கின்ற போதும், ஒவ்வொரு இனத்தவரும் தமது மொழி தொடர்பாக எழுத்தறிவு உள்ளவர்களாக இருப்பது திருப்திகரமாக உள்ளது. ஒவ்வொரு இன மக்களும் தமது மொழி தவிர ஏனைய மொழி தொடர்பாக பேசுதல், எழுதுதல் போன்ற செயற்பாடுகளை அறிந்து வைத்து உள்ளனர். ஆனால் பேச்சுத்திறமை உள்ள அளவிற்கு எழுத்துத்திறமை குறைவாக இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

இலங்கைப் பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் வரி வடிவக் குறியீடுகளான எழுத்துக்களுக்கு கல்விச் செயற்பாட்டில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. எழுத்தறிவு எனும் போது இரு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

1. எழுத்துக்களை அழகாக உறுப்பமைய எழுதும் பயிற்சி.
2. எழுத்தில் உள்ள விடயங்களை ஆழமாக கற்று தம் அறிவை வளர்க்கும் முயற்சி.

மேலேயுள்ள விடயம் முன்பள்ளிக் கல்வியில் இருந்து ஆரம்பமாகின்றது. அதனை எழுத்தறிவு என்று கொள்ள முடியாது. எழுத்துப் பயிற்சி எனலாம். இரண்டாவதாக கூறப்பட்ட விடயம் நாட்டின் எழுத்தறிவு வீதம் என்பதனுள் உள்ளடங்குகின்றது.

இன்று இலங்கையில் எழுத்தறிவு வீதம் மிகவும் திருப்திகரமாக இருப்பதற்குப் பல நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டுள்ளன.

1 ஆண், பெண் வேறுபாடின்றி கல்வி வழங்கப்படல்.
2 கல்வி நடவடிக்கைகளுக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்படல்.
3 இலவச கட்டாய கல்வித்திட்டம் அமுற்படுத்தல்.
4 பாடசாலைகளுக்கான மனித மற்றும் பௌதீக வளப் பகிர்வு.
5 முதியோர் கல்வி, பெண்கள் கல்வி, தொழிலாளர் கல்வி, முறைசாராக் கல்வித் திட்டங்கள் செயற்படுத்தப்படல்.
6 பிள்ளைகளின் போசாக்கு மற்றும் சுகாதார வசதிகள் அதிகரித்துக் காணப்படல்.
7 தாய்மார் இறப்பு வீதம் குறைவடைதல்.
8 பெற்றோரின் தொழில் வருமானங்கள் அதிகரித்துக் காணப்படல்.
9 சமூக அடுக்கமைவில் ஏற்றத்தாழ்வுகள் குறைவடைந்த நிலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்தல்.

11 ஆசிரியர்களுக்கான பொருத்தமான பயிற்சி வழங்கப்படல்.

12 முன்பள்ளி, மற்றும் ஆரம்பக் கல்வியில் அதிக கவனம் செலுத்துதல்.

13 சிறந்த தொடர்பாடல் வசதிகள் ஏற்படுத்தப்படல்.

14 இளவயதுத் திருமணங்கள் குறைக்கப்படல்.

இத்தகைய காரணங்களால் நாட்டின் எழுத்தறிவு வீதம் அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் இவ்வாய்வு தொடர்பாக சில கருது கோள்கள் முன்வைக்கப் படுகின்றன.

### ஆய்வின் கருதுகோள்கள்

1. இலங்கையின் எழுத்தறிவு வீதம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் பங்கெடுத்துக் கொள்கின்றது.
2. எழுத்தறிவு வீதத்தின் அதிகரிப்புக்கு அரசால் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
3. பாடசாலைகள் மாணவர்களின் எழுத்தறிவை வளர்ப்பதில் பெரும் பங்கெடுத்தல் அவசியமாகும்.

### ஆய்வுப் பிரச்சினை

நாட்டின் எழுத்தறிவு வீதம் சகல மேம்பாடுகளுக்கும் வழிவகுக்கும் என்பதனால் ஒரு நாடு நாட்டு மக்களின் எழுத்தறிவை வளர்ப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

### ஆய்வுமுறை

எழுத்தறிவு வீதத்தின் வளர்ச்சி தொடர்பாக ஆராயும் வகையில் வரலாற்று முறை ஆய்வும், ஒவ்வொரு ஆண்டுகளிலும் எழுத்தறிவு வீதம் எந்நிலையில் இருந்தது என்பது, அதற்கான காரணங்களை கண்டறியும் வகையிலும் ஆராயப்படும் போது அது ஒப்பீட்டு முறை ஆய்வாகவும் அமைகின்றது.

### முடிவுரை

ஒரு நாட்டின் எழுத்தறிவு வீதத்தை வளர்த்துச் செல்லுதலில் பாடசாலைகளின் பங்களிப்பு அதிகமானது. குழந்தைகளுக்கு ஆரம்ப வகுப்பில் இருந்தே உரிய முறையில் மொழி கற்பிக்கும் போது எழுத்தறிவு வளர்ச்சியடைகிறது. எழுத்தறிவு வீதம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அதிகளவு பங்களிப்பு செய்கின்றது. இலங்கையைப் பொறுத்த மட்டில் கல்வி நடவடிக்கைகளுக்கு அரசு அதிக நிதியை ஒதுக்கீடு செய்வதனால் எழுத்தறிவு வீதம் அதிக வளர்ச்சிப் போக்கையே காட்டுகிறது எனலாம்.



பாடட்டும் பைந்தமிழை பருகட்டும் அதனமுதைப் பாரோருள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் அகராதிகளில் இலங்கைத் தமிழ்ச் சொற்களும், சொற்பொருள்களும்

**கலாநிதி சுபதினி ரமேஷ்**
மொழியியல் ஆங்கிலத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

ஒரு மொழியைப் புரிந்து கொள்வதற்கு அதன் இலக்கண அமைப்புப் பற்றிய அறிவு மட்டும் போதாது. சொல் வளம் பற்றிய அறிவும் இன்றியமையாதது. அவ்வகையில் அகராதிகளின் பங்கு போற்றுதற்குரியதாகும். தமிழ் மொழியைப் பொறுத்தவரை காலத்துக்குக் காலம் பல அகராதிகள் தோன்றியுள்ளன. அதிலும் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட பேரகராதி 124,405 சொற்களைத் தொகுத்து வெளியிட்டு எழுபது ஆண்டுகள் கழிந்துவிட்டன. இவை சுட்டிக் காட்டிய இலங்கை வழக்குச் சொற்களும் சொற்பொருள்களும் வழக்கில் மாற்றமடைந்தும் வழக்கொழிந்தும் காணப்படுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு அச் சொற்களின் நிலை பற்றி ஆராயும் முகமாக இக் கட்டுரை வரையப்பட்டுள்ளது.

காலத்துக்கு காலம் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் மொழியில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமையை இன்றைய வழக்காறுகளில் காணக்கூடியதாக இருக்கிறது. அவ்வகையில் இங்கு சென்னைப் பல்கலைக்கழக பேரகராதியின் ஏழு தொகுதிகளும் கிரியாவின் அகராதியும் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ்ச் சொற்கள் பற்றிய ஆய்வு முன் என எடுக்கப்பட்டுள்ளது. இவை யாழ்ப்பாணத்து வழக்கு எனப் பதிவு செய்யப்பட்டு அவற்றின் பொருள் (J) என்ற குறியீட்டின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் இவற்றை யாழ்ப்பாண வழக்கு என முழுமையாகக் கொள்ள முடியாது. ஏனெனில் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் இவை வழக்கிலுள்ளன. எனவே இவற்றை யாழ்ப்பாண வழக்கு என வரையறுப்பதைவிட இலங்கை வழக்கு எனக் குறிப்பிடுவதே மிகப் பொருத்தமாகும்.

எனவே, ஆயிரக் கணக்கான சொற்களும், சொற்பொருள்களும் இலங்கை வழக்காகிய செயற்பாங்கு பற்றிச் சிந்திப்பது மொழியின் போக்கை உணர்ந்து கொள்வதற்கு உதவும். அவ்வகையில் மேற்கூறிய இரு தொகுதி அகராதிகளையும் அடிப்படையாகக் கொண்டு இலங்கைத் தமிழ் சொற்கள் அடைந்த மாற்றங்களையும் பொருள் மாற்றங்களையும் ஆராய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

மேலும் பேரகராதி வெளியிட்ட காலத்தில் அதன் பதிப்பாசிரியர்கள் இலங்கையின் யாழ்ப்பாணத்து அறிஞர்களுடன் கொண்ட தொடர்புகளால் இத்தகைய முடிவுகளை எடுத்திருக்கலாம். ஆயினும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்களிலும் இச் சொற்கள், சொற்பொருள்கள் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்காலத்து அகராதியான கிரியா அகராதி பல சொற்களை இலங்கை வழக்கு எனப் பொதுப்படச் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் பேரகராதி (J) எனக் காட்டும் அனைத்தும் கிரியாவில் இடம்பெறவில்லை. எனவே இத்தகைய வேறுபாடுகள் எழுந்தமைக்கான காரணங்களும் இக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

இன்று தமிழ் நாட்டு மக்களுடன் பல வழிகளாலும் விரைவாக நெருங்கிய தொடர்பு கொள்ளக் கூடியதாக இருப்பது மொழிப் புலமை வளர்ச்சிக்கு காரணமாகின்றது. இவற்றிற்கேற்ப பல துறைகளில் புதிய புதிய சொற்கள் உருவாகின்றன. எனினும் சில சொற்களைப் பொறுத்த வரையில் தமிழ் நாடும் இலங்கையும் வேறுபடுகின்றன. கலைச் சொல்லாக்கம் அங்கும், இங்கும் வெவ்வேறாக நடைபெறுகின்றது. எனவே இன்றைய போக்குக்கேற்ப புதிய சொற்களையும், பொருள்களையும் சேர்த்து பேரகராதியை அறிவியல் நோக்கில் செம்மைப்படுத்தி அமைப்பது தமிழ் மொழிக்கு ஆற்றும் பெரும் பணியாக அமையும். இவை யாவற்றையும் மனதில் இருத்தி இவ் ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மருத்துவமும் சித்தர்களும்

**மருத்துவர் மிதிலைச்செல்வி ஸ்ரீகாந்தன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், தரம்-1,
சித்த மருத்துவப்பிரிவு, திருகோணமலை வளாகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

தமிழ் மருத்துவத்தில் முக்கியமாக சித்தர்கள் கருதப்படுகிறார்கள். இவர்கள் வடமொழியில் இருந்த மருத்துவக்கருத்துக்களை தமிழில் மாற்றியமைப்பதில் வல்லமை பெற்றிருந்தனர். சித்த மருத்துவம் தமிழ் மருத்துவமாக மாறுவதற்கு காரணமான சித்தர்களை சித்தமருத்துவ நூல்கள் பட்டியலிடுகின்றன. இந்நூல்களில் சில சித்தர்கள் விடுபட்டும், சிலர் சேர்க்கப்பட்டும் மொத்தமாக பதினெண் சித்தர்கள் என வகைப்படுத்தி இருக்கிறார்கள். இதனை பதினெண்சித்தர் நாடிசாஸ்திரம், பதினெண்சித்தர் ஞானக்கோவை, பதினெண்சித்தர் மூலிகை அகராதி என்பன சுட்டிக்காட்டுகின்றன. சித்தர்கள் குரு சீட பரம்பரையாக தமிழ் மருத்துவத்தை மனவழியில் போதித்தனர். பிற் காலத்தில் சித்தமருத்துவர்கள், பண்டிதர்களால் பனையோலையில் எழுதப்பட்டு தற்போது நூலுருவிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் மாற்றப்பட்டு வருகின்றன. இச்சித்தர்கள் அரச ஆதரவையோ அல்லது தமிழ்ச்சங்கங்களின் ஆதரவையோ பெறாமல் தமது ஆத்மீக பலத்தை நம்பி மனித சமுதாயத்துடன் இணைந்து வாழாமல் காட்டில், மலைக் குகைகளில் வாழ்ந்து தமிழ் மருத்துவத்தை வளர்தெடுத்தனர். பதினெண்சித்தர்களில் அகத்தியர் முருகனிடம் தமிழ் கற்றவர் என அறியப்படுகிறது. அகத்தியர் 21000, அகத்தியர் பரிபூரணம், அகத்தியர் ஆயுர்வேதம், அகத்தியர் நயனவிதி, அகத்தியர் குணபாடம், அகத்தியர் இரத்தினச்சுருக்கம் - 300, அகத்தியர் வைத்திய காவியம் 1200 எனப் பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார். இலங்கையில் அகத்தியரின் வைத்தியமுறைகளைப் பரப்பியவர் புலத்தியர் சித்தர் எனவும் அவர் யாழ்ப்பாணத்தில் சமாதியானார் எனவும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் தமிழ் பரம்பரை வைத்தியர்கள் தமது மருத்துவ மூலநூலாக அகத்தியர் மருத்துவ காவியங்களை பயன்படுத்துகின்றனர்.

போகர் எனும் சித்தர் முருகப்பெருமானின் அருள் பெற்றவர். போகர்-700,போகர் நிகண்டு, போகர் சரக்கு வைப்பு - 800 எனப் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். இரசவாதக்கலையில் வல்லுனரான இவர் பழனியில் பாடாணங்களைக் கொண்டு பழனிசாமியை பிரதிக்ஷ்டை செய்வித்தார். இலங்கையில் கதிர்காமத்திலும் முருகனுக்கு இயந்திரம் செய்வித்தார். இதன் பலனான இலங்கையில் கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி ஆகிய இடங்களிலும் ஈழத்துச் சித்தர் பரம்பரை உருவாக வழிவகுத்தது. யாழ்ப்பாணம் நல்லூர் தேரடியில் செல்லப்பா சுவாமிகள், யோகசுவாமிகள் என்போரின் அருள் பாலிப்பால் யாழ்ப்பாணத்து தமிழ்மருத்துவம் சிறப்பிடம் பெறுகிறது. யோகசுவாமிகள் அருள் வாக்குப்பெற்று கந்தர்மடம், வண்ணார்பண்ணை, கஸ்தூரியார் வீதியில் பல சித்த வைத்தியர்கள் பிரபல்யமாக வைத்திய சிகிச்சை புரிந்தார்கள். இதில் கஸ்தூரி முத்துக்குமாரு வைத்திய பரம்பரை முக்கியமானதாகும். இன்றும் நல்லூர் கோவிலை அண்டிய பகுதியில் குடையிற்சுவாமிகள் வைத்திய நிலையம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. திருமூலரால் எழுதப்பட்ட திருமந்திரத்தில் சித்த மருத்துவக்கருத்துக்கள் உடலின் தோற்றம், கருவுற்பத்தி, ஆரோக்கிய வாழ்வு என தமிழ் மருத்துவக்கருத்துக்களை எழுதியுள்ளார். இன்றும் விஞ்ஞான ஆராய்ச்சியில் கண்டு கொள்ள முடியாத மருத்துவ சிந்தனைகளைக் கூறியிருப்பது அவரின் மெய்ஞான, விஞ்ஞான அறிவின் வளர்ச்சியை கோடிட்டுக் காட்டுகிறது. இராமதேவர் அரேபியா சென்று தமிழ் மருத்துவத்தைப் பரப்பியதால் அதிலின்று மேலைத்தேய மருத்துவம் வளர்வதற்கு அடிகோலினார். யூகி முனிவர் ஒரு மருத்துவ மேதையாவார். யூகிசிந்தாமணி, யூகி வாதகாவியம் என்ற 3000 பாடல்களைப் பாடியுள்ளார். இவ்வாறு புலிப்பாணி என்பவர் புலிப்பாணி 500, புலிப்பாணி பலதிரட்டு என நூல்களை இயற்றியுள்ளார்.

சித்தர்கள் மருந்துகளை கண்டுபிடித்து நோய்ப்பிணி தீர்ப்பதில் வல்லுனர்களாக விளங்கினார்கள். இந்தியா, இலங்கை, ஆபிரிக்கா, சீனா, எகிப்து,அரேபியா நாடுகளில் தமிழ்மருத்துவத்தை பரப்பியுள்ளார்கள். மருத்துவ முறையில் காயகற்பமுறைகளை கண்டு பிடித்து நரை, மூப்பு, பிணி வராது பாதுகாப்பதில் வெற்றியும் கண்டுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலப்பதிகாரத் தொன்மம் ஆய்வுச் சுருக்கம்

**கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்**
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதற் காப்பியம். கால் அணியாகிய சிலம்பினை வைத்துக் காப்பியம் அமைத்தார் இளங்கோவடிகள். சிலப்பதிகார காலத்திற்கு முன்பே திருமாவுண்ணி கதை இருந்திருக்கின்றது என்பதை நற்றினை காட்டுகின்றது. நாட்டுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார். அதற்குப் பின்னர் தமிழ் நாட்டில் கோவலன் கதை (அம்மானைப் பாடல்), கோவலன் நாடகம், கண்ணகி படம், நாவல் என்பன வெளிவந்தன. அவற்றிற்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரம் இன்றுவரை சிறந்த இலக்கிய வடிவமாகவும் முத்தமிழ் காப்பியமாகவும் நின்று நிலைக்கின்றது. இதனை அடியொற்றி ஈழத்தில் கண்ணகி வழக்குரை, கோவலன் கதை, சிலம்பு கூறல் என்ற காப்பிய நூல்கள் தோற்றம் பெற்றன. சிலப்பதிகார மூலக்கதையில் இருந்து இவை திரிந்தும் புதுமையாகவும் அமைகின்றன. இதுவரை ஈழத்து சிலப்பதிகாரத் தொன்மம் பற்றி ஆராயப் படவில்லை. இவ்வாய்வு ஈழத்து சிலப்பதிகாரத் தொன்மம் பற்றி ஆய்வதாக அமைகின்றது.

**நூல் ஆசிரியரும் காலமும் பின்னனணியும்**

கோவலன் கதை - பருத்தித்துறையில் பாராயணம் செய்யப்படுகின்றது. சயவீரன் என்ற ஆசிரியரால் எழுதப்பட்டுள்ளது. கண்ணகி வழக்குரை - காங்கேயரால் எழுதப்பட்டது. மட்டக்களப்பில் பாராயணம் செய்யப்படுகின்றது. சிலம்பு கூறல் - குடாரப்பு வெற்றி வேலரால் எழுதப்பட்டது. முல்லைத்தீவு, வவுனியாவில் பாராயணம் செய்யப்படுகின்றது.

**தொன்மம் அடிப்படையில் கதை புனைந்துரைத்தல்**

சிலப்பதிகாரத்தில் கண்ணகி சாதாரண குடும்பப் பெண்ணாக படைக்கப்பட்டு பின்னர் தெய்வீகப் பெண்ணாக மாற்றமுறுவதைக் கதை சொல்கின்றது. ஆனால் ஈழத்து கண்ணகி வழக்குரை, சிலம்பு கூறல், கோவலன் கதை என்பவற்றில் கண்ணகி தெய்வ அவதாரமாகக் காட்டப்படுகின்றது. கோவலன் கதை, சிலம்பு கூறலில் முற்பிறப்பில் இருந்த பராசக்தியே கண்ணகியாக வருவதாகக் காட்டப்படுகின்றது. கண்ணகி வழக்குரையிலும் மாங்கனி பேழையில் இட்டதும் பெண் குழந்தையாக (தெய்வக்குழந்தை) மாறியதைக் காட்டுகின்றது. சிலம்பு கூறலில் மதுரையை எரித்த கண்ணகி, கோபம் தணியாது தமிழ் நாட்டிலிருந்து இலங்கையில் உள்ள வற்றாப்பளைக்கு வந்து அற்புதங்கள் புரிந்த செய்தி கூறப்படுகின்றது.

கோவலன் கதை, சிலம்பு கூறலில் கோவலன் கண்ணகி பாலுறவு மேற்கொள்ளவில்லை. மணவறையில் கோவலன் கண்ணகியை தழுவ முற்பட்ட பொழுது அறைமுகடு அளவுக்கு அக்கினி எழுந்தது. கோவலனுக்குத் தான் தீண்டத்தகாத கற்புடையவள் என கண்ணகி குறிப்பிட்டாள். கோவலன் தனது தாபத்தைப் பொருள் கொடுத்து பிறபெண்ணிடம் தணித்துக் கொள்ளலாம் எனவும் கண்ணகியைத் தீண்டினால் கோவலன் நீறாகிவிடுவான் எனவும் கதை அமைப்பு செல்கின்றது. கண்ணகி வழக்குரையிலே இடைச்சேரியில் கோவலனும் கண்ணகியும் பாலுறவு மேற்கொண்டனர். (அடைக்கலக் காதை 30)


கோவலன் கண்ணகி அவதாரம், முற்பிறப்பு உறவுமுறை, வெடியரசன் முதலியோரின் வரலாறுகள் மூன்று நூல்களிலும் வேறுபட்டு அமைகின்றன.

கருத்து விளக்கத்திற்காகவோ பாத்திர பண்பு வளர்ச்சிக்காகவோ தொன்மங்களை உவமை, உருவகம், அணி, அடைமொழி உருக்காட்சி படிமப் புனைவாகப் புனைவது போன்ற உத்தி முறைகள் மேலும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், கனவுகள் என்ற தொன்மம் பற்றிய செய்திகள் மூன்று நூல்களிலும் எடுத்துக் காட்டி விளக்கப்படுவதோடு சிலப்பதிகாரத் தொன்மத்தோடு இவை ஒப்பாய்வு செய்யப்படும்.

ஈழத்து மூன்று சிலப்பதிகாரக் காப்பியங்களிலும் கதைப் புனைவு வேறுபட்டும் ஒன்றுபட்டும் அமைவது ஆய்ந்து கூறப்படும். சிலப்பதிகாரத் கதையையும் ஈழத்துச் சிலப்பதிகாரக் கதைகளையும் ஒப்பிட்டு நோக்கும் போது அற்புதமும் அழகியல் உணர்வும் காட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொகுக்கப்பட்ட அகராதிகள்



**பேராயர் கலாநிதி ஜெபநேசன்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையிலே பல அகராதிகள் தொகுக்கப்பட்டன. இதற்குக் காரணம் புரட்டஸ்தாந்து மதப்பிரசாரகர்களின் வருகையாகும். தமிழைக் கற்றுக் கொள்வதற்கு அகராதிகள் அதிகம் தேவைப்பட்டன. செய்யுள் வழக்கை மட்டுமன்றி பேச்சுத் தமிழையும் புரிந்துகொள்ள வேண்டிய தேவை பிறநாட்டுத் தொண்டர்களுக்கு இருந்தது.

அகராதியின் வளர்ச்சியை மூன்று நிலைகளிற் காணலாம். முதலில் தமிழ்ச் சொற்களுக்குத் தமிழிலேயே பொருள் கூறும் அகராதி; அடுத்து ஆங்கிலச் சொற்களுக்கு தமிழில் பொருள் கூறும் அகராதி; இறுதியாக தமிழ்ச் சொற்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருள் கூறும் அகராதி.

மேனாட்டவரின் அகராதிப் பணி இலங்கைத் தமிழ் அறிஞர்களையும் இத்துறையில் ஆர்வம் கொள்ளச் செய்தது. அவர்கள் தமது சொந்த முயற்சியால் அகராதிகளைத் தொகுத்து தமிழ் கற்கும் மாணவர்களுக்கு துணைபுரிந்தனர்.

அருஞ்சொல் அகராதிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டன. டாக்டர். எஸ்.எவ். கிறீன் என்னும் அமெரிக்க சமயத் தொண்டர் முதன் முதலாக ஆங்கில மருத்துவப் பதங்களை நிரைப்படுத்தி விளக்கமளித்தார். இதன் பின்னர் பல்வேறு துறைகளுக்கு அருஞ்சொல் அகராதிகள் தொகுக்கப்பட்டு வருகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அகராதிக் கலை யாழ்ப்பாணச் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கியது என்பதனையும் இன்றுவரை அது வளர்ந்து வருகின்றது என்பதனையும் விளக்குவதாக இவ்வாய்வுரை அமையவுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண வழக்கில் வழக்கொழிந்து போகும் தமிழ்ச் சொற்கள்

## - ஒரு சமூக மொழியியல் ஆய்வு

**திருமதி. சிவராணி சிறிசற்குணராசா**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழியியல்- ஆங்கிலத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

ஒரு பொருளை உணர்த்த ஒரு குறிப்பிட்ட காலத்தில் வழங்கப்பட்ட சொல் காலப் போக்கில் இழக்கப்பட்டுப் போதல் வழக்கிழத்தல் எனப்படும். இவ்வழக்கிழந்து போகின்ற சொற்களுக்குப் பதிலாக புதிய சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வழக்கிழந்து போகும் தன்மை எழுத்து வழக்கை விடப் பேச்சு வழக்கிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது.


ஒவ்வொரு காலப் பகுதியிலும் வாழும் மக்களின் வாழ்க்கை முறைக்கும் தேவைக்கும் ஏற்றவாறு பொருள்களைக் குறிக்கும் சொற்கள் குன்றியும் திரிந்தும் விரிந்தும் வழங்குகின்றன. இவ்வாறாக நமது சமுதாயத்தில் ஒரு காலத்தில் பெரு வழக்கினைப் பெற்றிருந்த சொற்கள் இன்று வழக்கிழந்து போயுள்ளமையையும் அவ்வழக்கிழந்த சொற்களுக்குப் பதிலாக இன்று வேறு புதிய சொற்கள் பயன்படுத்தப்படுகின்றமையையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

நாம் பேசும் யாழ்ப்பாணத் தமிழ் மொழியில் எத்தனை சொற்கள் வழக்கொழிந்து போய்க் கொண்டிருக்கின்றன? வழக்கொழிந்து போகும் சொற்களையும் அதற்கான காரணங்களையும் சுருக்கமாக விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

இன்று யாழ்ப்பாணச் சமுதாயத்தில் முன்னைய காலத்தவர் பயன்படுத்திய பல சொற்கள், தொடர்கள் என்பன பயன்பாட்டில் இல்லை. தொன்மை வாய்ந்த பழையசொற்கூறுகளைக் கொண்ட யாழ்ப்பாணத்து தமிழ் மொழியில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சொற்கள் வழக்கொழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. அவற்றை கள ஆய்வு மூலம் திரட்டிப் பெறப்பட்ட தரவுகள் முதன் நிலைத்தரவுகளாக இவ்வாய்விற்குப் பெரிதும் உதவுகின்றன.

இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் முதலியன பயன்படுத்தப்பட்டதனூடாக இந்த ஆய்விற்கான தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

வழக்கொழிந்து போகும் தமிழ் சொற்கள் பற்றிய ஆய்வு, விரும்பிச் செய்யத்தக்க செய்ய வேண்டிய ஓர் ஆய்வாக உள்ளது. இப்பொருள் பற்றி வருங்காலத்தில் ஆராயும் ஆய்வாளர்களுக்கு இவ்வாய்வு ஒரு அடிப்படையாகவும் அமையும் எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்க-மன்யோசு அகப்பாடல்களில் கூற்றுநிலை

## - ஓர் ஒப்பீடு

**செல்வி. செல்வ அம்பிகை நடராஜா M.Phil**
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

இந்த ஆய்வுக் கட்டுரை சங்க - மன்யோசு அகப்பாடல்களை கூற்று நிலையில் ஒப்பீடு செய்து சில ஆய்வு நிலையான கருத்துக்களை முன்வைப்பதாக அமையும். பழந்தமிழ் இலக்கியமான சங்கப் பாடல்களும் ஜப்பானிய பழைய பாடல்களான மன்யோசுவும் தோற்ற கால அடிப்படையில் வேறுபட்டவை. ஆனால் பொருள் நிலையில் நெருங்கிய தொடர்புடையவை. பொருள் மரபின் ஒற்றுமையைச் சொல்மரபும் இலக்கண மரபும் மேலும் வலுப்படுத்திக் காட்டுகின்றன. உலக மொழிகளில் இலக்கியவளம் பெற்ற மொழிகளுள் ஒன்றாகத் தமிழ்மொழி விளங்குகின்றது. தமிழ் மொழியின் தொன்மையையும் செழுமையையும் எடுத்துக்காட்ட வேண்டியது காலத்தின் தேவை. அதற்குத் தமிழைப் பிறமொழிகளோடு ஒப்பாய்வு செய்வது இன்றியமையாதது. இக்கட்டுரை ஒப்பீட்டு ஆய்வுக்குச் சங்க-மன்யோசுப் பாடல்கள் தரவாகப் பயன்படுத் தப்படும்.


கட்டுரை ஐந்து பகுதிகளைக் கொண்டமையும் முதலாவது பகுதி தமிழ்-ஜப்பானிய ஒப்பீட்டாய்வின் அறிமுகமாக அமையும்.

இரண்டாவது பகுதி ஒப்பீட்டாய்வின் தரவுகளை விளக்கும் பகுதியாக அமையும்.

மூன்றாவது பகுதி கூற்றுநிலை பற்றிய செய்திகளை இலக்கண அடிப்படையில் விளக்குவதாக அமையும்.

நான்காவது பகுதி மன்யோசுப் பாடல்களில் கூற்றுநிலை வகைப்பாடு செய்து காட்டப்படும். தொல்காப்பிய இலக்கண அடிப்படையில் கூற்றுநிலை மன்யோசுப் பாடலில் அமையும் வகை பொருத்திக் காட்டப்படும்.

ஐந்தாவது பகுதி சங்க-மன்யோசுப் பாடல்களின் ஒப்பீடாக அமையும். கூற்றுநிலை அடிப்படையில் இருமொழிப் பாடல்களும் ஒப்பீடு செய்து காட்டப்படும். இதன் மூலம் இரு மொழிப் பாடல்களிலும் கூற்றுநிலையில் அமைந்த பொதுத்தன்மைகளும் தனித்துவங்களும் இனங்காணப்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் எழுந்த தமிழ் மருத்துவ நூல்கள்

## - ஒரு பார்வை



**மருத்துவர் க .ஸ்ரீதரன்**
யாழ்ப்பாணம். இலங்கை.

**மருத்துவர் அன்புச்செல்வி ஸ்ரீதரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,சித்த மருத்துவப்பிரிவு,
யாழ் பல்கலைக்கழகம், இலங்கை.

மருத்துவம் எனும் தொழிலைச் செய்வதற்கு மருத்துவ அறிவு மிக முக்கியமானதாகும். இதற்கு ஆதாரமாக இருப்பது மருத்துவ நூல்களாகும். யாழ்ப்பாணத்தில் தமிழ் மருத்துவம் என்று கூறும்போது சித்தமருத்துவத்தையே குறிக்கிறது. இம்மருத்துவம் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடைபெற்ற காலமென பரராசசேகர மன்னன் காலத்தை அளவிடலாம். இக்காலத்தில் 12000 பாடல்கள் உடைய பரராசசேகரம் எனும் சுவடி வைத்தியநூல் எழுந்ததாக குறிப்பிடுகிறார்கள். இவ்வாய்வில் அச்சு வடிவில் எழுந்த மருத்துவ நூல்கள், அவற்றின் நோக்கங்கள், இந்நூல்களினால் மருத்துவத்தின் நிலைமை எப்படி இருந்தது? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.

### ஆய்வு முறையியல்

சித்தர்கள் காலத்திலே அச்சு இயந்திரங்கள் இல்லாத நிலையில் ஏட்டுச்சுவடிகளே காணப்பட்டன. இக்காலப் பகுதியில் மனனஞ் செய்து நினைவில் நிறுத்துவதற்கு எளிமையான முறையில் பாடல்வடிவிலே நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. கி.பி. 12- 15ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தமிழ் மன்னர் காலப் பகுதியில் பரராசசேகரம், செகராசசேகரம், இலங்கைச்சிங்க மன்னன் நயனவிதி போன்ற நூல்கள் தோற்றம் பெற்றன. கி.பி 17, 18 நூற்றாண்டில் அமுதாகாரம்,இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், பதார்த்த சூடாமணி, சொர்க்க நாதர் தன்வந்திரியம் போன்ற நூல்கள் உருவாக்கப்பட்டதாக கருதவேண்டியுள்ளது. ஆரம்ப காலத்தில் அச்சுஇயந்திரங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாதபோது இந்தியாவிலே நூல்கள் அச்சிடப்பட்டன. இதற்கு ஆதாரமாக 1892 இல் சுண்ணாகம், யாழ்ப்பாணத்தில் அ. வரதபாண்டியர் எழுதிய அமுதாகாரம் நூலை ச.தம்பையாப்பிள்ளை என்பவர் விக்டோரியா ஜூபி அச்சுக்கூடம், சென்னைப் பட்டினத்தில் பதிக்கப்பட்ட புத்தகம் கிடைத்திருப்பதாக சே. சிவசண்முகராஜா இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்தமருத்துவம் எனும் நூலில் குறிப்பிடுகிறார். 1904 இல் நயனவிதி குணமும் மருந்தும் எனும்நூல் யாழ்ப்பாண வைத்தியர்களின் ஏட்டுப்பிரதிகளிலிருந்து தொகுக்கப்பட்டதாக அறியக் கிடக்கிறது. இம்முயற்சி ஏடுகளில் உள்ள நூல்களை அச்சில் ஏற்றுவதற்கு ஆரம்பமாகவிருந்தது. ஐ. பொன்னையா அவர்களால் 1927 இல் இருபாலைச் செட்டியார் வைத்தியவிளக்கம், பதார்த்தசூடாமணி எனும் நூலும், 1928- 1936 காலப்பகுதிகளில் பரராசசேகரம் எனும் ஏட்டுச் சுவடியை 7 பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கன. இதனால் யாழ்ப்பாணத்தில் சித்த மருத்துவ வளர்ச்சி அபரிதமாகவிருந்தது எனக்கூறலாம். மேலும் பொன்னையா அவர்களால் 1930 இல் வைத்தியத்தெளிவு - அனுபந்தத்துடன், 1932 இல் வைத்தியசிந்தாமணி, 1932 இல் வைத்திய சூரணம்-205, 1933 இல் சொர்க்கநாதர் தன்வந்திரியம் ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார். தம்பிமுத்துப்பிள்ளை என்பவரால் 1932 இல் செகராசசேகரம் நூலும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. 1840 யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க மிஷன் ஆங்கில வைத்தியர் சாமுவேல் கிறீன் அவர்களாலும், அவர்தம் சிஷ்யர்களாலும் இந்துபதார்த்தசாரம், இரணவைத்தியம், பிரசவவைத்தியம், அங்காதிபாதம், கெமிஸ்தம், வைத்தியகாரம், மனுஷசுகரம், சிகிச்சாவாகடம் அருஞ்சொல் அகராதி போன்றவை எழுதப்பட்டன என சிவசண்முகராஜா இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து சித்த மருத்துவ நூலில் குறிப்பிட்டுள்ளார்.. இவை சித்த வைத்தியர்களின் வைத்திய மேம்பாட்டில் திருப்புமுனையாகியது. இதனால் முக்கியமாக இரணசிகிச்சை, பிரசவவைத்தியம் யாழ்ப்பாணச் சித்த வைத்தியர்களிடையே திறமையாக கையாள வழிவகுத்தது. நாட்டு மருத்துவிச்சிகளின் பயிற்சிக்கு கிறீன் அவர்கள் வெளியிட்ட நூல்கள் உறுதுணையாக அமைந்தன. பின் 1945 இல் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய பகுதிகளில் உள்ள வைத்தியர்கள் உபயோகித்த மருந்துமுறைகளை உள்ளடக்கி சுதேசவைத்திய அவுடதத்திரட்டு யாழ்ப்பாணத்தில் உருவானது. இது இந்தியாவில் சித்தவைத்தியத்திரட்டு நூல் போன்ற யாழ்ப்பாண மருந்து முறையியல் நூலாகக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

காணப்படுகிறது. பின்னர் நீண்ட இடைவெளிக்கு பின் மருத்துவம் சார்ந்த இலக்கிய படைப்புக்கள் கலாநிதி இ.பாலசுந்தரம் எழுதிய இலக்கியத்தில் மருத்து வக்கருத்துக்கள், சே.சிவசண்முகராஜா எழுதிய ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் 1993, இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம்-2000, அன்புச்செல்வி. ஸ்ரீதரன் எழுதிய யாழ்ப்பாணத்தில் சித்தமருத்துவம் அன்றும் இன்றும் - 2007 ஆகியவை குறிப்பிடத்தக்கன. பாடவிதானங்களில் இராமநாதன். பொ. எழுதிய சித்தமருந்து முறையியல் -2000, அன்புச்செல்வி ஸ்ரீதரன் எழுதிய மருத்துவிஞ்ஞான ஆய்வுகள் - 2007, சமூகமருத்துவம் ஓர் அறிமுகம-2007, திலகேஸ்வரி குமுதரஞ்சன் எழுதிய மூலதத்துவம் 2001, விவியன் சத்தியசீலன் எழுதிய குணபாடம் 2003, ஸ்ரீதரன் எழுதிய விஷவைத்தியம் 2009, அன்புச்செல்வி ஸ்ரீதரன் எழுதிய மருத்துவமனை நிர்வாகம்-2008 என்பன குறிப்பிடத்தக்கன.

### முடிவுரை

யாழ்ப்பணத்தரசர்களால் எழுதிப் பாதுகாத்த தமிழ் வைத்தியச் சுவடிகள் சித்த மருத்துவ வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. மன்னர்களின் வீழ்ச்சியுடன் வைத்திய ஏடுகள் தனிப்பட்ட வைத்தியர்களிடம் அவர்களின் சொத்தாக கைமாறின. இவை சில வைத்தியர்களை சிறந்த வைத்தியர்களாகவும், வைத்திய பரம்பரைகளாகவும் மாற்றியமைத்தன. 1929-1934 வரையில் ஐ.பொன்னையா அவர்களால் பல ஏடுகள் பாதுகாக்கப்பட்டு நூலுருப்பெற்றன. இவை மட்டுமன்றி வேறு பல வைத்தியர்களாலும் இயற்றப்பட்ட நூல்கள் வைத்தியத்தில் நோய்நிதானம், சிகிச்சை, மூலதத்துவம், மூலிகைகள், தாதுசீவவகுப்பு, வைத்திய இலக்கணம், விஷவைத்தியம், கண்வைத்தியம் எனப் பல்வேறு நூல்கள் எழுந்து தமிழ் மருத்துவத்தை வளர்தெடுத்தன. 1840 இல் வைத்தியர் சாமுவேல் கிறீன் அவர்கள் பல ஆங்கில நூல்களை மொழி பெயர்ப்புச் செய்ததால் சித்த வைத்தியம் மேலைத்தேய வைத்திய அறிவைப் பெறுவதற்கு வழிவகுத்தது. பின்னர் 1990 இன் பிற்பகுதியில் இலக்கிய சம்பந்த அறிவை வளர்ப்பதிலும், சித்த மருத்துவ நூல்களின் உருவாக்கலின் அவசியத்திற்கும் நூல் உருவாகத் தொடங்கின. 2000ஆம் ஆண்டுக்குப் பின்காலப்பகுதியில் பாடவிதானங்கள் சம்பந்தமாகவும், மருத்துவ ஆராய்ச்சி சம்பந்தமாகவும், நோய்வராது பாதுகாப்பு தொடர்பாகவும், மருத்துவமனை நிர்வாகம் போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பலநூல்கள் உருவாகியிருப்பது தமிழ் மருத்துவ நூல்களின் பரிணாம வளர்ச்சியை கோடிட்டுக் காட்டுகிறது. இந்நூல்களை பாதுகாப்பது காலத்தின் தேவையாகும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தமிழர் வாழ்வில் சித்த மருத்துவ விஞ்ஞானம்


ஆய்வுகள் மூலம் வெளிக்கொணரப்பட வேண்டும் என்கிறார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, சித்தமருத்துவத்துறை, முதுநிலை விரிவுரையாளர் சே.சிவசண்முகராஜா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளரான சே. சிவசண்முகராஜா அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் B.S.M.S பட்டப்படிப்பை முடித்தவர். மேலும் குழந்தை மருத்துவ பட்டமேற்படிப்பை M.D(S) அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டையில் கற்று, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜீ.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் முடித்தவர்.

இதுவரை காலத்தில் அவர் எழுதிய மொத்த நூல்களின் எண்ணிக்கை 23 ஆகும். இவரது 'ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்' என்ற நூலுக்கு 1993 ஆம் ஆண்டில் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்துள்ளது. மேலும் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கநூல் பரிசு ( நூல் - ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம் 1993), இலங்கை அரச கரும மொழித் திணைக்கழகப் பரிசு (நூல் - சுதேச மருத்துவக் கையகராதி - 1997), வடக்கு கிழக்கு மாகாண உயர் கல்விக்கான விருது (நூல் - சித்த மருத்துவ மூல தத்துவம் - 2003), இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசு (நூல் - இந்து ஆலயங்களில் மருத்துவ சுகாதாரம் - 2006) ஆகிய விருதுகளை இவர் வென்றுள்ளார்.

இலங்கை சித்தமருத்துவத்தை உலக அரங்கிற்குக் கொண்டுவருதலும் தமிழர் வாழ்வில் சித்த மருத்துவ விஞ்ஞானம் வகிக்கும் பங்கினை ஆய்வுகள் மூலம் வெளிக்கொணர வேண்டும் என்பதும் இவருடைய தணியாத தாகம் ஆகும். அதன் ஒருபடியாக 'இலங்கையில் சித்தமருத்துவம் - தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில், இவர் உலகச் செம்மொழி மாநாட்டில் ஓர் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்கவுள்ளார். தமிழகமும் ஈழநாடும் ஒரே நிலப்பரப்பாக அதாவது குமரிக்கண்டமாக இணைந்திருந்த காலம் தொடக்கம் இன்றுவரை இலங்கையில் சித்த மருத்துவம் கண்ட வளர்ச்சி பற்றிய ஆதாரபூர்வமான ஓர் ஆய்வாக இவ்வாய்வுக் கட்டுரை அமையவுள்ளது.

- உமா பிரகாஷ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயுமானவரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஐஸக் தம்பையா

தாயுமானவர் மொழிபெயர்ப்பில் கையாண்ட நுட்பங்கள் போன்ற முக்கிய அம்சங்களை ஆய்வுக்கட்டுரையாளர் சோ.பத்மநாதன் எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்கிறார்.

சோ.ப என்ற முதலெழுத்துக்களால் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட, சோ.பத்மநாதன் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். கவிஞர், சொற் பொழிவாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர் என்ற பன்முக ஆளுமை படைத்தவர் இவர் என்பது பெருமைக்கு உரிய ஒரு விடயமாகும்.

சோ.ப இந்த எழுத்துக்களுக்குள் மறைந்திருப்பது சோ.பத்மநாதன் எனும் ஒரு நல் இதயத்துக்குச் சொந்தக்காரன். ஆங்கில இலக்கியம் படித்து, ஆங்கிலப் பேராசிரியராக இருந்து கொண்டு, தமிழ்வளர்க்கும், தமிழ்பழக்கும், தமிழ்க்காதலர். நல்ல மரபுக் கவிஞர், சிறந்த பேச்சாளர்.

அவருடைய 'ஆபிரிக்கக் கவிதை' (2000) சாகித்திய மண்டலப் பரிசையும், வடக்கு - கிழக்கு மாகாணப் பரிசையும் பெற்றது. 'வடக்கிருத்தல்' (1998), 'தென்னிலங்கைக் கவிதை' (2003) ஆகியவை மாகாணப் பரிசு பெற்றவை. இவருடைய இசைப்பாக்கள் 'நல்லூர் முருகன் காவடிச் சிந்து' (1986), 'முத்துச் சிரிப்பு' (2005) ஆகியவை இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் குரலில் ஒலிப்பேழைகளாக வெளி வந்துள்ளன. ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்களை ஆங்கில மூலம் உலகறியச் செய்யும் பணியிலும் சோ. ப. ஈடுபட்டுள்ளார். இவருடைய மொழிபெயர்ப்புக்கள் Journal of South Asian Literature (1987), Penguin New Writing in Sri Lanka (1992), Lutesong and Lament (2001), A Lankan Mosaic (2002) ஆகிய தொகுதிகளில் இடம்பெற்றுள்ளன. இவரால் மொழிபெயர்க்கப்பட்ட குழந்தை சண்முகலிங்கத்தின் நாடகங்கள் Shanmugalingam : Three Plays என்ற நூலாக வெளிவந்துள்ளது.

ஐஸக் தம்பையா அவர்கள் யாழ்ப்பாணம் மானிப்பாயில் 1869ஆம் ஆண்டு பிறந்தவர். சட்டம் கற்று இங்கிலாந்தில் பாரிஸ்டராகி, மலேசியாவில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தவர். 1924 இல் யாழ்ப்பாணம் திரும்பி அங்கிலிக்கன் திருச்சபையில் மதகுருவாகப் பணி ஆற்றியவர். அது மாத்திரமல்லாமல் 'உதயதாரகை' பத்திரிகையின் ஆங்கிலப் பதிப்புக்கு ஆசிரியராகவும் இருந்தவர்.

இப்பெருமகன் சைவப் பக்திப் பனுவலாகிய தாயுமானவர் திருப்பாடலில் ஈடுபாடு கொண்டு அதில் 379 பாடல்களைத் தேர்ந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். Psalms of a Saiva Saint (1925) என்ற அந்நூலுக்கு அவர் எழுதிய 189 பக்க ஆராய்ச்சி முன்னுரை இறையியலிலும் சமய ஒப்பியலிலும் அவருக்கிருக்கும் ஆழ்ந்த அகன்ற அறிவுக்குச் சான்று பகரும்.

ஐஸக் தம்பையாவின் மொழிபெயர்ப்பை சோ.பத்மநாதன் அவர்கள் ஆய்வுக்கு உட்படுத்துகிறார். சொல், சொற்றொடர், மற்றும் மரபு மட்டங்களில் அவர் பின்பற்றிய மொழிபெயர்ப்பு நுட்பங்களையும், அவர் மூலத்துக்குக் காட்டியுள்ள விசுவாசத்தையும் இவ்வாய்வு எடுத்துக் காட்டுக்களுடன் மதிப்பீடு செய்கிறது.

- பிரியங்கா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Overcoming Dyslexia as the Solution for the Tamil Speaking Students in Jaffna Peninsula

**Mrs. Kavitha Navakulan**
Lecturer,
Department of Linguistics,
University of Jaffna,
Sri Lanka.

Dyslexia is one of the learning disorders with the difficulties in reading. Mainly it happens while the problem in the processing of written words to the brain. Even though it affects a certain number of children's learning ability, knowledge on this disorder and the remedial techniques to overcome this disorder are very limited in the society.

Reading is one of the language skills. When it is affected due to Dyslexia, the children face several problems in the forms such as mirror image, sequencing the numbers, finding correct words, pronunciation etc.

Problem in the reading skill, also causes difficulties in other learning skills such as writing, speaking. As the result of Dyslexia, children hesitate to go to school, avoiding socialization and having fear of expressing their other creative activities.

But when the parents and the teachers aware on this disorder, it helps to improve the children's learning ability. And it lays the foundation to step toward a bright future.

Thus, this paper aims to point out some of the remedial techniques to overcome this disorder particularly for Tamil Dyslexics.

**Hypothesis**


- Teachers might not have the awareness on Dyslexia.
- Parents might not understand the actual problem of their children.

**Research Methodology**

a) **Research area**: Research area covers three primary schools in Jaffna Peninsula.
   About 15-20 Tamil dyslexics will be selected from these three schools, for data collection.

b) **Data collection**: Data will be collected through direct observation and direct interview method.

c) **Data analysis**: Data will be analyzed from the linguistic point of view. (Phonologically and morphologically).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Sri Lankan modern Tamil and Sinhala poetry

## - a comparative study

**Miss. Sivagowri Sivagurunathan**
Lecturer
English Language Teaching Centre
University of Jaffna, SriLanka

**Abstract**

Literature is an essential element in the formation of national, regional and cultural character and identity. The translations of literature more than sociological documents sensitize us to the lives, thoughts and emotions of people of different groups and communities in an intensely personal way.


In Srilanka, the role of poetry in Tamil and Sinhala has been highly effective in providing the people with the needful inspiration and necessary insights. The poetry for the Srilankans is a source of learning and becoming aware of their destiny that necessitates the knowledge of their past, present and possible future.

The objective of this paper on 'Sri Lankan modern Tamil and Sinhala poetry - A Comparative Study' is to compare the themes of Tamil and Sinhala poems which are written after the independence and reveal the fact that Srilankan poetry is not simply an offshoot of any tradition but the socio, cultural and political situations in Srilanka forced the poets to record their feelings.

This paper not only compares Sri Lankan Tamil and Sinhala revolutionary poems which sharply attack the social inequalities, social evils, the hegemony of an oppressive caste system, the denigration of women and so forth but also emphasizes the role of SriLankan women in the development of Tamil and Sinhala poetry.

The socio-political experiences Srilankan Tamils have undergone after 1980's have no parallel in the Sinhala experiences. This paper presents the salient features of Tamil poems which deal with the traumas and vicissitudes of ethnic war, violence and displacement sometimes exile.

This paper explores the fact that SriLankan modern Tamil and Sinhala poetry in English becomes a powerful medium through which Srilankans convey to the world audience not only their despair and hopes, the enthusiasm and empathy, but also a nation's history as it moved from various conflicts to tasks of reconstruction.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாநாடு சிறப்புறுவதாகுக

**அட்டைப் படம்:**
ஈழத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து நின்று போராடித் தமிழையும் தமிழ்ப்பண்பாட்டையும் தம்மால் இயன்ற வரை காப்பாற்றிய தமிழ் மன்னர்களில் ஒரு பிரதிமையை, கலைக்கேசரி இச்செம் மொழி மாநாட்டு சிறப்புமலரின் அட்டைப் படமாக பெருமையுடன் பிரசுரிக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தளரா முயற்சியினால் இந்திய மத்திய அரசு தமிழைச் செம்மொழியாக பிரகடனப் படுத்தியதை அடுத்து, தமிழக அரசு, முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி தலைமையில், பண்டைய தமிழகத்தில், கொங்கு நாடு என சிறப்புப் பெற்ற வணிக நகரான கோயம்புத்தூரில் இம்மாதம் 23ம், 24ம், 25ம், 26ம் மற்றும் 27ம் திகதிகளில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை வெகு சிறப்பாக நடத்துகிறது. தமிழ் அன்னையை ஏற்றிப் போற்றும் இம்மாநாட்டினை ஈழத் தமிழர்களாகிய நாமும் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்.

இவ்வேளையில் இலங்கைத் திருநாட்டுக்கு சிறப்பாகவும், தமிழ் கூறும் நல்லுலகிற்கு பொதுவாகவும், கடந்த 80 வருட காலமாக அருஞ்சேவையாற்றிவரும் வீரகேசரி நாளிதழின் சகோதரப்பத்திரிகையான கலைக்கேசரி என்னும் கலை, இலக்கிய, தமிழ் பண்பாட்டு மாத இதழ் ஒரு சிறப்பு மலரை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

நம் தாய் மொழியாம் தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்புக் குறித்து நாம் எப்போதும் பெருமைகொள்பவர்கள். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தமிழினத்தின், பண்டைப் பெருமைகளை அக்காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களால் ஆக்கப் பெற்ற பல்வகைப்பட்ட இலக்கியச் செல்வங்களும் மற்றும் ஆக்கங்களும் எமக்கு எடுத்துக் கூறும் பாங்கு, நாம் என்றென்றும் புளகாங்கிதம் கொள்ள வைப்பன.

இதற்கு முன்னர் தமிழின் மிகப்பெரிய இலக்கண நூலான தொல்காப்பியம், இவற்றிற்கெல்லாம் இலக்கணம் வகுத்து, இற்றைவரை தமிழ் மொழியின் அருஞ்சிறப்பை பேசுகிறது என தமிழ் அறிஞர்கள் போற்றுவர்.

உலகில் ஏறத்தாழ மூவாயிரம் மொழிகள் பேசப்படுகின்ற வாயினும், கிரேக்கம், இலத்தீன், ஹீப்ரு, சமஸ்கிருதம், தமிழ், சீனம் ஆகிய ஆறு மொழிகள் மட்டுமே காலத்தால் பழைமையும் இலக்கிய வளமும் கொண்டவையாக பெருமைபெற்றுள்ளன என மொழி ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். இதனால் அவற்றை தொல்சீர் மொழி என்பர். இது இப்பொழுது செம்மொழி எனக் குறிப்பிடப்படுகிறது.

மேற்கூறிய மொழிகளைப் போன்று தமிழும் செவ்வியல் தன்மை கொண்டிருந்த அதே வேளை இற்றைவரை உலகெங்கும் வாழும் தமிழர்களால் பேசப்படும் மொழியாக விளங்கிய போதும் கடந்த நூறாண்டு காலமாக, தமிழியல் வல்லுனர்கள், அதன் தொல்சீர் தன்மை குறித்து, ஆழ்ந்த ஆய்வின் அடிப்படையில் நூல்களை வெளியிட்டிருந்த போதும், தமிழ் செம்மொழி என்னும் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை என்பது தமிழ் அறிஞர்களின் மனக்குறை ஆகும்.

மேலும் பண்டைக்காலம் தொட்டு இற்றைவரை அதன் தொடர்ச்சி குன்றாமல் போற்றப்பட்டு வந்த தமிழ் மொழிக்கு, காலத்துக்கு காலம், கற்றறிந்த தமிழ்ப் புலவோர் தமது அரிய நூல்கள் மூலம் வளம் சேர்த்து வந்திருக்கிறார்கள். இந்த வகையில் ஈழமும் தனது பங்களிப்பை ஆற்றி வந்துள்ளதையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமே.

யாழ்ப்பாணம் ஈன்ற தவப்புதல்வர், வசன நடை கைவந்த வல்லாளர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும், கிழக்கிலங்கை தந்த பெருமகனார் சுவாமி விபுலானந்த அடிகளாரும், இலங்கையிலும் தமிழகத்திலும் ஆற்றிய தமிழ்ப்பணி தமிழக அறிஞர்களாலும் ஏற்றிப் போற்றப்படுவன.

தமிழின் வளர்ச்சியை உலக நிலைப்படுத்த பெரும்பாடுபட்ட பேராசிரியர் வண. தனிநாயக அடிகளாரையும் நாம் ஈண்டு நினைவு கூர்கிறோம்.

மேலும் நவீன தமிழ் இலக்கியத் துறை மூலம், ஈழத்துப் பேராசிரியர் (அமரர்) க. கைலாசபதி, மற்றும் இன்றும் எம் நாட்டில் தமிழ்ப் பணி ஆற்றிக் கொண்டிருக்கும் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர், தமிழக அறிஞர்கள் மத்தியில் பெற்றிருக்கும் பெருமதிப்பும் யாவரும் அறிந்ததே. இப்பெருமதிப்பின் வெளிப்பாடாக பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள், தற்போது நடைபெறும் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் கருத்தரங்குகளுக்கு தலைமை வகிக்கின்ற தனிப் பெருமையை பெற்றிருப்பதும் ஈழத்தமிழர்களாகிய எமக்கு பெருமை தருவதாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்வினை பெருமைப்படுத்தும் வகையில் கலைக்கேசரி வெளியிடும் சிறப்பு மலருக்கு, தமது வாழ்த்துச் செய்தியை மனமுவந்து நல்கிய தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு எமது இதயபூர்மான நன்றிகள். அத்துடன் எமது வேண்டுகோளை ஏற்று தமது கட்டுரைகளையும் நேர்முகங்களையும் தந்துதவிய பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் மற்றும் அறிஞர்களுக்கும் எமது நன்றி உரித்தாகும். மேலும் இச்சிறப்புமலர் சிறப்புற ஆலோசனைகளையும் வழிகாட்டல் களையும் நல்கிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கும் எமது சிறப்பான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு சிறப்புறுவதாகுக,

வணக்கம்

***திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை***
*ஆசிரியர்*
*கலைக்கேசரி*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PUBLIC ... JAFFNA

## ஆய்வுப் பொருண்மைகள்

**மாநாட்டுப் பொருண்மை**

'தற்கால உலகில் தமிழ்ச் செம்மொழி'

**முகப்பரங்கம்**

1. தற்கால உலகில் தமிழ் இலக்கியங்கள்
2. தற்கால உலகில் தொல்காப்பியம்
3. தற்கால உலகில் திருக்குறள்

**தனிப் பொழிவரங்கம்**

1. சங்ககால அரசியலில் புலவர்கள்
2. சங்ககால வாழ்வியல்
3. தலித் இலக்கியம்
4. பெண்ணியம்
5. ஆட்சித் தமிழ்

**கலந்துரையரங்கம்**

1. தமிழ்வழிக் கல்வி
2. அண்மைக் காலத் தொல்லியல் ஆய்வுகளும் தமிழ் மொழி இலக்கியக் காலக் கணிப்புகளும்
3. காலத்திற்கேற்ற தமிழ் மேம்பாடு
4. உலகமயமாதல் சூழலில் தமிழ்
5. மாறிய பாலியம்
6. உலக நாடுகளில் தமிழும் தமிழரும்
7. எழுத்துச் சீர்திருத்தம்
8. இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழகத்தின் பங்களிப்பு

**அமர்வரங்கம்**

1. தமிழும் உலகச் செம்மொழிகளும்
2. தமிழ் இலக்கியம்
3. இலக்கணம்
4. மொழியியல்
5. திராவிட மொழியியல்
6. மரபுவழிக் கலைகள்
7. நாட்டுப்புற இலக்கியம்
8. தொல்லியல்
9. கல்வெட்டியல் மற்றும் தொல்லெழுத்தியல்
10. நாணயவியல்
11. அரசியல், சமூக, பொருளாதார வரலாறு
12. ஒப்பிலக்கியம்
13. திறனாய்வு
14. இலக்கியக் கொள்கை
15. அகராதியியல்
16. பிறநாடுகளில் தமிழ்ப் படைப்பிலக்கியம்
17. சுவடியியலும், பதிப்பியலும்
18. ஊடகத் தமிழ் (தொலைக்காட்சி, வானொலி, மேடை, இதழ்கள்)
19. சமயமும் தமிழும்
20. மொழிசார் இயக்கங்கள்
21. மொழிபெயர்ப்பு
22. மொழிக் கல்வி
23. தமிழகப் பழங்குடி மொழிகள்
24. தமிழும் மெய்யியலும்
25. சிறுவர் இலக்கியம்
26. புதிய இலக்கிய வகைகள்
27. தமிழும் பிற இந்திய மொழிகளும்
28. கலை, இலக்கியப் பண்பாட்டு வரலாறு
29. படைப்பிலக்கியம்
30. வட்டார வழக்குகளும் தகுநிலை வழக்கும்
31. சொற்பிறப்பியல்
32. கலைச்சொல்லாக்கம்
33. சமுதாய அறிவியல்
34. மொழிசார் அரசியல்
35. மரபுவழி அறிவியல்
36. தமிழ்த் திரைப்படங்கள்
37. ஆவணப் படங்கள்
38. தமிழிசை
39. கணினித் தமிழ்
40. சூழலியலும் தமிழும்
41. கட்டுமானக்கலை
42. தமிழ் மருத்துவம்
43. சிற்பக் கலை
44. பெண்ணியம்
45. தலித்தியம்
46. நுண்கலைகள்
47. நூல் பாதுகாப்பு
48. ஆவணத் தமிழ்
49. சிற்றிதழ்கள்
50. சிந்துவெளிப் பண்பாடும் எழுத்துக்களும் - திராவிடத் தொடர்புகள்
51. அறிவியலும் தமிழும்
52. ஊர்ப் பெயராய்வு
53. நாடகவியல்
54. உரையாசிரியர்கள்
55. மொழி மேலாண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செம்புல மண்ணின் மக்கள் வாழ்வியலை ஒன்றிணைக்கும் - விடியல் வாடைக் காற்று வீசும் யாழ்.மண்ணின் இணையத்தளம்...**

**www.yarlmann.lk**




Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org